உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சயங்கொண்டான்

அருளிச்செய்த

கலிங்கத்துப்பரணி.

இது

சென்னைக்கிறித்தவ கலாசாலைத்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

பல பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்தது.

சென்னை:

தாம்ஸன் கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

1898.

விலை: அணா-8.

Printed by Thompson and Co.,
At the "Minerva Press," 33, Popham's Broadway, Madras.

பொருளடக்கம்.

முகவுரை.

சொல்வளர் செந்தமிழ்த் தொன்மொழி யதனுட்
பல்வளம் பழுநிய பனுவலின் றிறனெலா
மொருங்கே யமைந்தென வோங்குநூ லாயெம
மருங்குஞ் சுவையுறீஇ வயங்கும் பொருட்டொடர்
நிலையாய்ப் புலவர்நா நிலவுநற் பெருமை

சான்ற **கலிங்கத்துப்பரணி** யென்னு மிவ்வுயரிய நூல தொன்றுதொட்டுத் தொண்ணூற்றறுவகைப் பிரபந்தங்களாகப் பகுக்கப்படுஞ் செந்தமிழ் நூல்களுட் பரணியின்பாலதாம். இனிப் **பரணி**யென்பது போரிடை ஆயிரங்களிற்றியானைபட வென்ற வீரத்தன்மையுள்ள தலைவன்மீது பாடப்படுவ தொருநூலாம். என்னை?

"ஆனை யாயிர மமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி."—

இலக்கணவிளக்கம்.

இது கடவுள் வாழ்த்துக் கடைதிறப்புக் காடுபாடுதல் காளிகோயில் பாடுதல் பேய்களைப்பாடுதல் தேவியைப் பாடுதல் பேய்கட்குக் காளிகூறுதல் முதலிய வுறுப்புக்களைப் புனைந்து கூறுமுகத்தாற் பாட்டுடைத் தலைவன்சீர்த்தியுஞ் சிறப்பும் அவன் எடுத்துச்செலவு முறையுஞ் செருமுடித்தலும் முதலாயின கூறுதனுதலி அளவடிமுதலாக எனைத்துச்சீரானும் ஈரடித்தாழிசைகளாகக் கேட்டோர் உள்ளம் மகிழ்ச்சி கூரப் பெரும்புலவரா னுரைக்கப்படுவது. என்னை?

"கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டங்
கடிகண முரைத்தல் காளிக் கதிசொல
லடுபேய்க் கவள்சொல லதனாற் றலைவன்
வண்புக ழுரைத்த லெண்புறத் திணையுற
வீட்ட லடுகளம் வேட்ட லிவைமே
லளவடி முதலா வடியிரண் டாக
வுளமகிழ் பரணி யுரைக்கப் படுமே."—

இலக்கணவிளக்கம்.

ஒரு சாரார், இதனைப் 'புலவர்நாட்டிய மரபுபற்றிப் பாடுவதே யன்றி யிதன்றன் மெய்க்கருத்து யாதோ வெனில் ஓரரசன் தனது நால்வகைத்தானைகளோடு தன்னாட்டினின்றும் பகைஞரை வேறல்கருதி வஞ்சி சூடி அவர்மேற் சென்று அவர்தம நாட்டகத்துப் புகுந் தும்பைதரித்துப் போர்புரிந்து வென்றிபெற்று வாகைமிலைந்து சிலதிங்கள் கழிந்தபின்னைத் தன்னாட்டிற்குத் திரும்பிப் போதரலும், குறித்தகாலத்துவாராது காலம் நீட்டித்துவந்த தலைவனோடுவன்றன் தலைவியா ஊடிக் கடைதிறவே னென்று கதவங்களைமூடித் தாழி ட்டுக்கொண்ட தலைமகள் அவர்தம் ஊடறணிப்பான் தனது நாட்டுப் புலவர்பெருமானை விடுத்தலும் அவன் அத் தலைமகளிரைப் பலவகை நயமொழிகளானும் விளித்து அவர்தாந் தங்கணவரொடு பிணங்குதற்கு முன்னிரு ந்த திறத்தினை அவர்கேட்டு மகிழுமாறு இனிமை யொடு மெடுத்துரைத்து அவர்தமைக் கோபந்தணி த்துச் சாந்தப்படுத்துக் கடைதிறக்குமாறு செய்ததன் பின்னர், அரசன் சென்ற காட்டின் கொ[illegible]மையையும

அக்காட்டிலுள்ள பேய்கள் காளிக்குச் சொல்லுமா
றுங் காளி பேய்கட்குச் சொல்லுமாறுங் கூறி அரசன்
கொண்ட வெற்றித்திறங்களை விளக்கமாயும் விரிவாயு
மெடுத்துரைத்தலாமென்க' வென்ப.

இனிப் பரணியெனப் பவந்தப்பெயர் போந்ததன்
மொழிப்பொருட் காரணம் யாதுகொலென் றாராயப
புக்கவிடத்துப், 'பரணிபோந்தார் தரணியாள்வார்'
என்னும் முதுமொழிக்கேற்ப வெற்றிசம்பந்தமாய்ப்
பிரயோகிக்கப்படும் நாட்பெயர நூற்பெயராகவும்
அமைந்திருககலாமென் றெண்ணுதற்கிடனுண்டெனை
வும், தினைப்புனங் காககுநர் ஒரு பரண்மே லேறி
யிருந்து கிள்ளையாதிய தினைப்பகைகளைத் தட்டை
கவண்முதலிய கருவிகள் கைக்கொடு கடிதல்போல
யானையெருத்தமபொலிய அதன்மீதிவர்ந்து வின்முத
லிய படைக்கலன்கொண்டு பகைவரைக கடிதலிற்
பரணியெனப் பெயர்பெற்றதெனவும, பரண்போலு
மொருமேலிடத்து விலகியிருந்து காணுநர் பிறருககு
விரித்துக கூறுதல்போன்று நிகழ்ந்தபோரினைக கண்
டோர் கூற்றாகக் கூறுதலின் இப்பெயரெதிற்றென
வும, பரணியென்பது அணிகலன்கள்பெய்த செபபி
னுக்கும் பெயராதலின், அதுபோலப பலவணிகளும்
நயஙகளுஞ சுவைகளும் பொதுளிய பான்மைபற்றி
யப்பெயர்த்தாயிற்றெனவும, பரணியென்றசொல சிற
சிலவிடங்களின் யானைப்போாவென்றியெனும பொ
ருளின் வருதலின் ஈண்டுப் பரணியென்பது அவ்
வென்றியைக்கூறும் நூலுககுக் கருவியாகுபெயரா

யமைந்ததெனவும், பஃறலைப்பட்ட விடைகள் கிளைத்தல் காண்கின்றும். ஆயினும் இவையனைத்தும் அவரவர் தத்தமத்குத் தோற்றியவாறே கூறிய உத்திக் கூற்றுக்களெனற்பாலனவே யன்றி மெய்யுரைகளாக் கோடற்கியலாவாம்பிறவெனக. இனிப் பரணியென்பதுகூத்தின்பெயராமாதலின் இந்நூலினுள்ளும் பேய்களின் கூத்துக் கூறப்படலாற் பரணியெனப் பட்டதெனக் கூறுவாரும், இந்நூலகத்துக் களம்பாடிய பகுதியிற் பரணிக்கூழெனப் பன்முறையும் ஆசிரியர் கூறுதலான் அக்கூழடுதற்கேற்ற கருவியாய அடுப்பினையாதல் .மடைக்கலத்தினையாதல பரணியென்னுஞ்சொல் உணர்த்தல் வேண்டுமென்பது போதருதலிற் பரணியெனுஞ் சொற்கு அப்பொருள்களுளவோ வென்றுய் வுழியுந் தங்கூற்று வலியுறுகின்றதெனக கூறுவாருமுளர். ஈண்டைக்கூறிய யாவரும் பரணியென்னுஞ் சொலலைத் தாம நாடொறும் வழக்கமாய்ப்பாரகரும் அகராதிகளி லெடுத்துபபார்தது அதன்கணசசொல் லிற்குக் கூறப்பட்ட வொவ்வொரு பொருளையு மிவ் வாறெடுத்தமைத்துப பெரிது மிடர்பபட்டுச சமர்த்தித்துத் தமக்குட்டாமே மனப்பாலகுடித்து மகிழுறுவாராயினா. இதுநிற்க.

இனித் தொல்காப்பியப் பொருளதிகாரத்துச செய்யுளியலிற கொசசகவொருபோகி னிலக்கணங் கூறுஞ் சூத்திரவுரையின்கண் ஆசிரியா உசசிமேற் புலவர்கொள் **நச்சினார்க்கினியர்** பாணிப்பாட்டாகிய தேவபாணி முதலாயின தனக்கினமாகிய வண்ணகத்

திற்கோதிய தரவின்றித் தாழிசைபெறுமெனவும், பாணியுளெல்லாம் இரண்டடியானே தாழம்பட்ட வோசைவிராஅய் வருதலும் முடுகிவருதலுமுளவெனவும்,

" உளையாழி யோரேழு மொருசெலுவி னடங்குதலான்
விளையாட நீர்பெருஅ மின்னுருவம் பராவுதுமே"

என்றாற்போலப் பாணிசசெய்யுளுட் பயின்றுவருமபலதாழிசை தொடர்பொருள் வாகலின் அவற்றைப் பலவடுக்கிவரினுந் தாழிசையாமென்கவெனவும், மற்றுப் பாணியுட்புறததிணை பலவும் விராஅய் வருதலின் அது தேவபாணியாமென்ற தென்னையெனின், அவையெலலாம் காடுகெழு செலவிக்குப் பாணிநாட்கூழுந் துணங்கையுங்கொடுத்து வழிபடுவதோா வழக்குப் பறறி அதனுட் பாடடுடைததலைவனைப் பெய்துசொலலப்படுவன வருதலான் அவையெலலாவாற்றானுந் தேவபாணியேயா மென்பதெனவுங கூறுநிறறலின ஈண்டு யாம் ஆராயப புகுந்த பரணியென்பது பாணியென்றே யிருத்தலவேண்டுமெனல பெறுதும். அன்றியும முற்காலத்து ஓலைசசுவடிகளின் வரிவடிவின்கண் ரகார மனைததுஞ சிலவுயிாமெய்ந்நெடி லாகாரத்தோடியலும காலெனவெழுதபபட்டிருததலும் ஒருவாறு எமது கூற்றை வலியுறுததுகின்றமை காண்க.

[சிவபெருமானை வெகுளிதணிவிப்பான் முன்னிலைப்படுத்துப் பராவுதல கருதி மதுரைக் கடைசசங்கத்துப் புலவர்பெருமான் நககீரன் வாய்மலர்ந்தருளிய பெருந்தேவபாணி யென்னும் நூலினதியலபு மீண்

டுற்று நோக்குதற்பாற்று." அது வெண்பாவினுன்முடியுங் கொச்சகவொருபோகு தேவபாணியாய் வந்ததாம். அன்றியுமது யாப்பு வேறுபாட்டோடு பொருள் வேறுபாடும் இடையிடை விரவப்பெற்று வந்த பாணிச்செய்யுளாமெனக்கொள்க.]

அற்றேற் கலிங்கத்துப்பாணியென்னுது கலிங்கத்துப்பரணியென்றதென்னையெனிற் பரணி பரணியென்றே பிற்காலத்தார் யாவரானும் வழங்கப்பெற்றுப் போதருகின்றமையானும், அவ்வாறு பரணியென வருமிடந்தோறும் யாம் மாற்றப்புகின் அஃது அவ்வவ்வாசிரியர்தங் கருத்தொடு முரணுறு மாதலானும், அவாதம்மேற் குறைகூறியதா மாதலானும், அதுவுந் தான் வரம்பின்றியோடு மாதலானும், அன்றியும் ஒருமொழியின்கண் அதிகாரம் பெற்றியலுறாஉ மொரு சொல்லினை மாற்றப்புகுதல் அறிவின்மையின்பாற் பட்டுக் குன்றுமுட்டிய குரீஇப்போலப் பெரிதுமிடர்ப்படவேண்டுதலானும், அன்னணம் மாற்றுதற் கருத்து அறவொழிக்கப்பட்டது. யாமீண்டிவ்வாறெலாமெடுத்துரைத்தவாற்றுற பயன் யாதுகொலோ வெனிற், பரணியென்னுஞ் சொலலின் மெய்யுருவுணர்ச்சி மாத்திரையே யாமெனக.

கலியினுற் செய்யப்படுவனவனைத்துங் காப்பியமாமாதலி னிதனைக் காப்பியமெனக் கூறுத லியலுமேனும் ஏறக்குறையப் பெருங்காப்பியத்தினிலக்கணமுடையவாய், "அறமுத னன்கிற் குறைபாடுடையது,

காப்பிய மென்று கருதப் படுமே" எனறு **தண்டியாசிரி யர்** கூறியாங்குச் சிறுகாப்பியத்தி னியன்முழுதுந் தம்மகத்துடையவாயிலங்குறாஉஞ் **சூளாமணி, நைடத** மாதிய நூலகள் போலாது வேறு தனிப்பவந்தமா நடைபெறுதலின் இதனைப் பொதுப்படப் பொருட் டொடர் நிலைச்செய்யுளெனல் சாலும். இனி யிக்கலிங் கத்துப்பரணி எண்வகைவனப்பினு ளொன்றாய்ப் புது வது புனையுந் தொடர்நிலை மேலதாம **விருந்து** என்ப தனியலுடைத்தாத லுய்த்துணர்க. இதனைத் **தோல் காப்பியப்** பொருளதிகாரச செய்யுளியல உசo - ஆஞ் சூத்திரத்தானு மதனுரையானுமறிக. இஃதிறறாக.

பரணிப் பிரபந்தம் நியதியின்றிப போரின்கண் வென்றி காணு மாந்தரையுந் தலைமக்களாக் கொண்டி யாககபபடுவதன் றென்பது முன்னரே யாமெடுத்துக காட்டிய **இலக்கண விளக்கச** சூததிரததானினிதுவிளங காநிறபவும், **தத்துவரா**ய ரியறறிய **அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி** முதலிய சில வேதாந்த நூல்களைக் கரிபோரக்கிச சூததிரத்தொடு முரணுமாறு காடடுவா ருமு சிலருளர். வேறு சிலர ‘ அறறன்று; அவையாவு மில கணவமைநதி பெற்றேயுளளன' வென்று மறுத்து ரைத்துத் தாது கூறறிறகு ஆதாரமாக வோரறபுத கதையொன்று படைத்துக கூறுதலுங் காண்க. எஃ தெறறாயினும் தேவா பெயரை மக்கட்கு மிடுதலாய ஆகுபெயரவு ருப்பறறி மேறகூறியபரணிப்போலி களும் பரணியெனப் பெயாபெறறன வெனலே யமை வுடைததாதல காண்க.

இந்நூல் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, பேய்களைப்பாடியது, கோயில்பாடியது, தேவியைப்பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர்பாடியது, களம்பாடியது எனும் பதின் மூன்று பகுதியினதாம். இப்பகுதிகளு ளொவ்வொன்றனையும் பற்றிச் சிறிது எடுத்து விரித்துரைப் பான்புக்கனம்:

க. கடவுள் வாழ்த்து: இதன்கண் உமாபதியாதிய பலவகைக் கடவுளர்க்கும் வாழ்த்துக் கூறப்பட்டிருத்தலும், பிள்ளைத்தமிழ்களில் திருமால் வணக்கம் முதற்கட் கூறப்படும் வழக்குப்போல இதன்கண் உமாபதிவணக்கம் முதற்கட் கூறப்பட்டிருத்தலும், **சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள்** ஞாயிறு போற்றுதல்போல இந்நூலாசிரியரும் இதன்கட் சூரியவணக்கங் கூறியிருத்தலும் இவற்றினொடு பிராமணர் மறை உயிர்கள் அரசனாகிய இவர்களினது வாழ்த்துக் கூறப்பட்டிருத்தலுங் காண்க. இன்னும் இக்கடவுள் வாழ்த்தின்கட் கூறப்படுங் கடவுளரொவ்வொருவரொடும் பரணித்தலைவனுக்குள்ள வொற்றுமைகளை ஆசிரியர் மிக்க நயம்பட வுரைத்திருத்தலையு முணர்க.

உ. கடைதிறப்பு: இதன்கண்ணே தங்கள் தலைவர்களோடூடிய நலமகளிர், தாமே தாழிட்ட கடைகளைக் கலிங்கத்து நிகழ்ந்த போரினைப் பாடவுங்கேட்கவும் வரும்பொருட்டுத் திறக்குமாறு வேண்டப்படுகின்றனர். அம்மடந்தையர்தம் உறுப்புக்களினியல்பும்,

நடையுடை பாவகளேனும், மென்மைத் தன்மையும், அன்னார் தங்க டலைவர்களோ டூடுமாறும், ஊடலொழி யுமாறும், கூடுமாறும், இன்னும் அவர்தம் ஏனையவி யல்புகளும் மிக்க சுவைதோன்றக் கூறப்பட்டுள்ளன. பள்ளியிடத்தூட லென்னு மகப்பொருட்டுறைபி னியலபு மிகச்செவ்வே யீண்டு விரித்துரைக்கப்பட்ட மை காண்க.

௩. காடு பாடியது: இது காளி வதியுங் காடாகிய பாலையினியல்பினை வர்ணித்துக்கூறுவது. இதன்கட பாலைநிலத்துக் கருப்பொருளெல்லாங் கூறப்பட்டுள. அவையிற்றானுட் பாலைநிலத்திற் காணப்படும் பல்வ கை மரங்களையும் ஆசிரியர் அழகுபெறக் கூறியிருக் கின்றனர். தொல்காப்பியப் பொருளதிகார வகத்திணை யியலின்கண் நச்சினார்க்கினியர் ஆதித்தனைப் பாலைத் திணைத்தெய்வமாக் கூறுதலின் ஞாயிற்றினது வெயிற் கொடுமையும், பாலைக்குரிய சிறுபொழுது நண்பக லாதலின் அதன் கொடுமையும் மிகவுஞ் சாதுரியமா கச சிறப்பித்துச சொலலப்பட்டுள்ளன. இதன் கண்ணே தற்குறிப்பேறறவணி பற்றிக கூறப்படுங கற்பனைகளை யாய்ந்தறிக.

௪. கோயில் பாடியது: இது பாலை நிலத்தின்கண் வதியுங காளியினது கன்முதலியவற்றினு னியன்ற கோயிலன்றி வேறு போரிடைப்பட்ட மன்னவாதம உறுப்புககளையும அணிகலன்களையுங் கருவிகளாக கொண்டு வகுககபபட்ட புதுமையாகிய கோயிலைச சிறப்பித்துக் கூறுவது. இதன்கட சோழராசர்கள் அவ்

வக்காலத்துப்புரிந்து வென்ற போர்களைப்பற்றிக்கூறப பட்டிருத்தலும், இங்ஙனஞ் சிறபபிக்கப்பெற்ற கோயி லெதிரே நின்று வீரர் காளியை நோக்கி வேண்டிப் பாடுகிடக்குமாறும், அன்னார் ஓமத்தீ வளர்க்குமாறும், தமது உறுப்புககளை யரிந்து பலியிடுமாறும், பராவு மாறும், பேய்கள்வந்து திரியுமாறும், இன்னு மிவை போல்வன பிறவுங் காண்க.

ரு. **தேவியைப்பாடியது**: இது மேற்கூறிய கோ யிலின்கணுறையுங் காளியினவயவங்களை வர்ணித்துக கூறுவது, **இறையனாரகப்பொருளுரையின்** கண்ணும், **நாற்கவிராச நம்பி** யியற்றிய **அகப்பொருள் விளக்கத்தின்** கண்ணும, இன்னும மற்றைய பின்னூல்களின்கண் ணும் பாலைநிலத்திற்குத் தெய்வமாகக காளியையே கூறியிருத்தல காண்க. இதுபற்றியன்றே காளியைக் காடுகெழுசெலவி யென்றுங் காடுகாளென்றுங் கூறு வதூஉ மெனக.

சு. **பேய்களைப்பாடியது**: இது முற்கூறிய தேவி யை விட்டகலாது அவளோடுடனுறையும் பேயின் குழூஉவினை வர்ணித்துக் கூறுவது. இதன்கட் பேயின் உருவச சிறபபுககளும், அவயவச் சிறப்புக்களும், செயற சிறப்புக்களும், கூறப்பட்டுள்ளன. அன்றியும் பேய்களினது அங்கக் குறைபாடு கூறுதல் போன்று சோழர்கள் வென்ற போர்க்களச சிறப்புங் கூறுத லுணர்க.

எ. **இந்திரசாலம்**: காளிகாதேவி பலவிதச்சிறப் புக்களுடனுங் கொலுவீற்றிருக்கு மமயத்துக் கோ

யிற்காவற்பேய் தேவியெதிரிற் போந்து வணங்கி 'முன் னொருகாலத்துக் காளியின் கோபத்தினுக்கஞ்சியோடி யிமயமலைச் சாரலின்கண் ஒளித்திருந்த பேய்களுள் ஒன்று போந்துளது; அஃது ஒரு குற்றமுஞ் செய்த தில்லை' என்று கூறிற்று. உடனே காளி அதனை யழை க்க வென்றலும் அப்பேய் கோயிலினுள்ளே வந்து தேவியைக்கண்டு கும்பிட்டு 'எங்கள் பிழையைப் பொ றுத்தருள்வாயாக' என்று பிரார்த்தித்துக கேட்டுக் கொண்டது. அதன் பின்னா அதுதான் கற்றறிந்த இந்திரசால வித்தையைக் காளிகண்டு களிகூருமாறு விநோதமாக வெளியிட்டுக காட்டிற்று. ஆதலின் இஃ திப்பெயாத்தாயிற்று. இதன்கண்ணே அப்பேய் இந் திரசாலங் காட்டுமுறை மிகவு நன்றுயமைந்துளது.

அ. **இராசபாரம்பரியம்:** நாரத முனிவர் கூறி யருளியாங்குக கரிகாற்சோழன் தன் குலத்துதித்த அரசாதம பெருமைகளை இமயமலையின்கண் ஆதியோ டந்தமா யெழுதிவைத்தமை யிதன்கட கூறபபடும். பல சோழராசாகளது சிறப்புககளும இதன்க ணாங்காங்கு வந்திருததல் காண்க. இவ்விராச பரம்பரையை இமய மலையினின்றும் போந்தபேய் விரித்துககூறக் கேட்டுக கொடு வீற்றிருந்த தேவி மகிழச்சி யெய்தினள்.

௯. **பேய்முறைப்பாடு:** இஃதிங்ஙன மிருப்பப் பேய களனைத்து மொருங்கு கூடி தேவியெதிரிற் போந்து "யாங்க ளுணவின்மையாற் பசிபபிணி யெய்தி மிகவும் வாடாநின்றேம்; அகளஙகளுகிய **விசயதர சோழனும்** மற்றைய மன்னர்தம்பால் முறையாகத் திறைபெற்று

அவர்மாட்டு அருள்புரிகின்ற ளாதலிற் போர்யாண் டும் நிகழ்ந்திற்றிலது. அம்மம்ம! இனி யென்செய்கேம்! உணவு கிட்டுதற்குரியகுறிமட்டும் நிகழ்தல் கண்டேம்" என்று முறையிட்டவிடயங் கூறுதலின் இது பேய் முறைப்பா டென்னப்பட்டது. இவ்வாறு பேய்கள் முறையிடலும் இமயமலையினின்றும் போந்த பேய் தான் போந்துழி வடக்கட் கலிங்க நாட்டில் நிகழக் கண்ட துர்நிமித்தங்களை யெடுத்துரைத்தது. அது கேட்டவணங்கு பசியான் வாடிய பேய்கள் சொன்ன குறியும் போந்தபேய் சொன்ன கலிங்க நாட்டுக்குறியும் ஆங்குத்தன்னருகே யிருக்கும் கணிதப்பேய் கூறிய நனவுகனவுகளுமாகிய விவையிற்றிற்குப் பலன் கூறுவாள் 'யானைப்போர் வென்றி யொன்று அகளங்கனால் ஓலையினிழும்' எனக் கூறுநிற்றலும் பேய்கள் கழி பேருவகை பூததுக் களியாட்டயர்ந்தன.

௰. **அவதாரம்:** இது பகவதி தனது பேய்க்கணங்களுக்குப் பாட்டுடைத்தலைவனாகிய விசயதர சோழனது பிறப்பினைக்கூறுவது. "சீராமனாகவுங் கண்ணனாகவு மவதரித்த திருமாலே மீட்டும் **விசயதர சோழனா**வுத தனன். அஃதெவவாறெனிற கூறுதுமுடம். கங்கை கொண்ட சோழனெனச் சிறப்பித்துச் செலலப்படும் இராசராசசோழனை மிகத்தவம் புரிந்தும் ஒரேயொரு பெண்மகவைப்பெறறு அவளையும் பாண்டியற்கு மணஞ்செய்து கொடுத்தனன். அதன்மேற்றனக்குப் பின்னர்த் தனது சூரியகுலம் விளக்கமெய்தவுஞ் சோணாடு தலையெடுத்து நிற்கவுஞ் செய்பவலல ஆண்மக

வின்மையிற் கவற்சியடைந்துழிப் பாண்டியன் மனைவி யாகிய தன்மகள் வயிற்றின்கண் ணோருந்தவச் செல் வக்குமார னுதித்தனன். அவனே நந்தம் **விசயதர சோழன்.** [அவனே யிப்பாட்டுடைத்தலைவன்.] அவ னையவன்றன் மூதாதையாகிய இராசராசசோழன் அபிமான புத்திரனாகப் பாண்டியன்பா லிரந்துபெற் றுக்கொண்டு அவற்கு இளவரசுபட்டஞ் சூட்டுவான் கருதி வளர்த்துவருவானாயினன். [இனி யக்குழவி வள ருமாறும், நடைபயிலுமாறும், மழலைமிழற்றுமாறும், முப்புரிநூல் தரிக்குமாறும், கலைபயிலுமாறும், போர் முறை தெளியுமாறுங் கூறப்படுகின்றன.] அதன்பினர் யானையேற்றமுங் குதிரையேற்றமும் பயின்று விசயத ரன் கலைஞானம் வல்ல காவல னாயினபின்றை யிளவர சுபட்டமு மெய்தினன். பிற்பாடு வளவர்பிரான்விச யதரன் **சக்கிரக்கோட்டத்து**ப போர்வென்று சயமகளைக கைப்பிடித்துப் புகழ்பெறீஇ வஞசிசூடி வடதிசை மேற்சென்றான். அங்ஙனஞ் சென்றவமயத்திற் றென்றி சைக்கட் கஙகைகொண்ட சோழ னிறக்குமாறு நேரிட டது. அதுபற்றித் தென்னாட்டிலே அரசாட்சிசெயகு நரின்றித் தருமந் தலைதடுமாறிப் போயிற்று. இவைய ணர்ந்த விசயதரன் உடனே சிறிது போழ்துந் தாழ்த் தலின்றித் தென்றிசைப்போந்து அரசுரிமை பூண்டு இராசசியத்தை மீட்டும் நன்னிலைக்கண் நிறீஇயினான். அதன்பின்னர்ச் சின்னாட கழிந்தபின்றை விசயதரன் ஒருநாட் பாலாற்றங்கரை மருங்கு வேட்டையாடுதல கருதிச சேனையொடும் புறப்பட்டுச சென்றனன். வேட டையாடி முடிந்தபின் அதிகைப் பதியைக்கடந்து கா

ஞ்சி நகரினுக்கேகினன்" என்று காளி கூறலும், கலிங்க நாட்டின்கட் போர்நிகழக் கண்டதொருபேய் பேருவகை பூத்து மிகவும் விரைந்தோடி வந்து அச் செய்தியைக்கூறிற்று. அது கேட்டு மற்றைப்பேய்கள் பெருமகிழ்வெய்திக் களிக்கூத்தாடின. அவ்வாறு கூறி வந்த பேயை விளித்துக் காளி "அப்போர் நிகழ்ச சியை நிகழ்ந்தாங்கே கூறுதி" என்றனள். இதுவே யிப்பகுதியிற் கூறப்படும் விடயம். இதன்கண் விசய தரனது யானையேற்றமுங் குதிரையேற்றமும் மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளன; விசயதரன் பாலாற்றங் கரைக்கண் வேட்டையாடச் செல்வுழி யவன்றனஞ் செய்ம் முறையும் அவன்றன் படைகளும் பரிவாரங்க ளுஞ் சென்முறையுங் கற்றோர் நெஞ்சங் காமுறுகருந் தகையனவாதல் காண்க.

௰க. காளிக்குக்கூளிகூறியது: பாலைத்திணைத் தெய் வத்திறுணையின் படி, கலிங்கப்போர் கண்ட பேய் அப் போரினை வகுத்துக்கூறுவான் றொடங்கி, அப்போர் நிகழ்ச்சிக்குக் காரணமாய் நின்றவற்றை முதற்கட் கூறுகின்றது. "காஞ்சிநகரத்தின்கண் மாமேருமலை யைப் பொருவுஞ் செம்பொன்னு னியன்ற அரசமாளி கைக்குத் தென்மேற்றிசையில் வகுக்கப்பட்டிருந்த சித்திர மண்டபத்து வெண்குடை நீழலிலே, ஒரு நாள் விசயதர சோழன் மகளிர்சாமரையிரட்ட வாழ் த்துநர் வாழ்த்தப் பாடுநர்பாடச் சிங்காதனத் தமர்ந்து "பாண ரொக்கல்" எனப்பெரியோர் பணித்தலிற் பா ணர்களோ டளவளாய் அவர்தங் கல்வியிற் பிழை

கண்டு கேளாநின்று, வேற்றரசருங் குறுநிலமன்னரும் முதலியோர் பணிந்து ஏவல் செய்யா நிற்பவும், வண்டைமன் றொண்டைமான் முதலிய மந்திரிமார் அருகிருப்பவும், இனிது வீற்றிருக்கு மமயத்து வேலையா ளொருவன் போந்து 'வேந்தர் திறையிடுமாறு புறத்தே நின்றனர்' எனக் கூறி விடைபெற்றபின் அவ்வேந்தர்களைப் புகுத்தினான். [ஈண்டுப்பன்னாட்டினர் பெயர்களும் மிகக நலம்படக் கூறப்பட்டுள.] அவ்வேந்தரனைவருந் தத்தமக்கியன்ற பொருள்களை யிறைமகிழத் திறையிட்டு நின்றனர். உடனே சயதுங்கசோழனும் அவர்கட்கபயமளித்தனன். அப்போழ்தத்துக 'கடகருந் திறைகொடு போந்து கழல்வணங்கினர்; மற்று வடகலிங்கர்பதி திறைகொண்டு இருமுறை வந்திலன்' என வருகுறை மதிவலோர் கூறக்கேட்ட நந்தம் அபயன் செவ்வாய வெண்ணகை நிலாக்கற்றை தூண்ட நகைத்து 'எளியனெனினு மவனது வலிய குன்றரண மிடிய வென்று, அவனையுமவன்றன களிற்றினங்களையும பற்றிக்கொண்டீண்டுப் போதுமின்' என்றலும, அண்மையினிருந்த வண்டைநகரரசன் **கருணாகரத்தொண்டைமான்** 'எளியேன் கலிங்கமெறிந்து வருவல்' எனக் கூறி விடைபெற்று நாலவகைத் தானையொடும வஞசி சூடிக் கலிங்கன்மேற் சென்றான். [ஈண்டைத்தானையின் சிறப்பும், அவைசெல்லுமாறும், மிகச்செவ்வனே புனைந்துரைப்பட்டுள்ளன.] பலநாடுகளும் நதிகளுங் கடந்து சென்று அச்சேனை கலிங்கத்தினருகே யிறுத்தலும், அதுகண்ட கலிங்கனது ஒற்றர் இவனது சேனையின் வலியையும் பெருமையையுங் கண்டு தம்பால நிக

ழாநிற்குந் தூர்க்குறிகளையுங் கருதி ஒருவர்க்கொரு வர் 'முன்னர் அபயனுக் கிடுதிறை தப்பியத னிமித்த மிவை நிகழ்வன போலும்' எனவெண்ணித் தமது அரசனிடம் உரைகுழற வுடல்பதற அரைத்துசில விழ வடிமிசை வீழ்ந்துரைத்தனர். அதுகண்ட வட கலிங்கர் வேந்தன் வெகுண்டு வெய்துயிர்த்து வியா த்து 'அபயனுக்கேயன்றி யவன்றன் றண்டினுக்கும் யானெளியெனோ?' எனக்கூறிப் புயங்குலுங்க நக்குத் தன்வரண்களையும் ஆண்மையினையும் புகழ்ந்துரைத் தலும், அவனமைச்சன் நன்மதி நவின்றனன். கலிங் கன் றன்னமைச்சன் என்ன கழறியுங் கேளானாய்ப் 'போர் தொடங்குக' எனக்கடிந்து கூறினன். உட னே களிற்றுப் படை சிறந்த கலிங்கன்சேனையுமுடன் று போர்க்கெழுந்தது.

௰௨. போர்பாடியது : கருணாகரத் தொண்டைமான் தலைவனாகப் போந்துள தானைக்கும் கலிங்கராசன் அதி பனாகப் போந்துள சேனைக்கும் நிகழ்ந்தபோரினைக் கூளி காளிக்குக்கூறியது. [இதன்கட் பாக்களைப் படிக்கும் போதே போர் எதிரே நிகழ்வது போலத் தோன்று நிற்கும். ஆண்டுப் போர்க்களத்துள வாயுதங்கள் குடைகள் முதலியவற்றின்மீது ஆசிரியர் தங்குறிப் பேற்றிப் புனைந்துளபாக்கள் பெரிது மின்பம் பயவா நிற்கும். இப்பகுதியில் வீரச்சுவைமிகுத் தோன்று மாறு முற்றுணர்க.] இன்னணம் நிகழாநின்ற போரின் கட் கருணாகரத் தொண்டைமான் ஆயிரக்கணக்கான களிறுகளையும் ஏனைச் சேனைகளையுமழித்து எழு

வகைக் கலிங்கரையுமிறப்பத் தொலைத்துவென்றனன். அக்கணம் அவர்கள் புறங்காட்டியோடுபு மலைமுழைஞ் சுகளிற் புக்கொளித்தனர்; அதுகண்டுமவன் விடாது அவர்களைப் பின்பற்றிச்சென்று அவர்க ளொளிந்து நின்ற வெற்பினை விடியளவும் முற்றிக் காத்துநின்ற னன். பொழுது புலர்ந்ததும் அவர்களனைவரையும் கைபபற்றிப் பலவாறு மானபங்கப்படுத்து விடுத்து விட்டுக் கலிங்கநாட்டின்கட சயத்தம்பம் நாட்டிக் கட கரியும் குவிதனமும் கவர்ந்துகொண்டு சோணாடு செ ன்று அபயனாகிய விசயதர சோழனடித்துணைமை வணங்கிநின்றனன்.

௰௩. களம்பாடியது: இங்ஙனம் அங்ஙனம் தொண் டைமானும கலிங்கருஞ் செய்த போர் நிகழ்ந்த களத் தினை வர்ணித்துககூறுவது. மேற்கூறியாங்குக் கலிங்க நாட்டினின்றும் போந்தபேய் போா நிகழ்ச்சியைச சொலலி முடித்துக் காளியைநோக்கி 'எம்மிறைவி! நீ விரைவினெழுந்தருளி அககளத்தினைக கண்டருளல வேண்டும' என்று வேண்டலுங் தேவி தனது பேயக் கணஙகளோ டாங்குசசென்று அவைபிறரினுக்கு அககளம் முழுவதையும் காட்டாநின்றனள். [ஈண் டுக காளிபேய்கட்குக் காட்டும் பொருள்களனைத்துஞ் சுதந்தர யூகமும் கற்பனைச செலவமும படைத்துநா யாற்றலும புறப்பொருட்டுறை நயங்களும் புலப்படு மாறு கூறப்பட்டுள்ளன.] அதன்பினர்க் காடுகாள பேய்ககணஙகளை விளித்து "ஈண்டு அளவிறந்து நிறை ந்து கிடககுங் தசை என்பு அரத்தம் ஆகிய பலவற்

றினையும் நீவிர் நுந்தமக்கு வேண்டிய வாறெலாம் பயன்படுத்துக்கொண்டு சோழராசனதுபெருமையை யுந் தொண்டமானது பெருமையையும் புகழ்ந்துபாடி யாடுமின்' என்று ஆணையிடுதலும் பேய்களெல்லாம் அன்னணமே யுண்டும் பருகியுந் தின்றும் நக்கி யும் மகிழ்பூத்துக் களிசிறந்து ஆடிப் பாடி வாழ்த்தி நின்றன. [இதன்கண் உவமையணி பற்றியுந் தன்மை நவிற்சியணி பற்றியு முயர்வுநவிற்சியணி பற்றியுங் கூறப்படுஞ் செய்யுட்கள்யாவுஞ் செவ்விவாய்ந்தன வேயாம்.] இதனுடன் இந்நூலிற் கூறப்படுங் கதையு மொருவாற்றான் முடிந்தது. இதுநிற்க.

இனிப் போரிடை யாயிரங் களிற்றியானை பட வென்ற வீரனைய கருணாகரத் தொண்டைமானை விடுத்து விசயதர சோழன் றலைமகனைப் பரணி பாடப் படாதென்னைகொலாமெனிற் கூறுதூஉம்: விசய தரன், வேந்தனிருந்துழி யிருந்து இருநில முழுவதுந் தன்னாணைவழி யொழுகுமாறு செய்யு மதிகாரமுடை யனாதலானும், தொண்டைமானு மிவன்றனாணைவழி யொழுகுறூஉந் தண்டத் தலைவனே யாதலானும், தானையின் சிறப்பெலாந் தலைவன் சிறப்பே யாதலா னும், விசயதரனே யிப்பாட்டுடைத் தலைவனாதற் கேற் புடைமை யினிதுபோதரும். அன்றியுங் கருணாகரத் தொண்டைமானது சிறப்பு மிடையிடையே கூறப்படு தலுங் காண்க.

போர் நிகழ்ந்த களமே பரணிக்கு மிகவு மின்றி யமையாத தாமாறு களம்பாடிய பகுதியாற் றெற்

றென விளங்கும். ஆகவே யக்களமாகிய கலிங்கத்
தின் பெயரினா லிந்நூல் கலிங்கத்துப் பரணியெனப்
பெற்றது. இத்தொடர்மொழி கலிங்கத்தைப் பற்றிய
பரணியெனப் பொருள்படும். அன்றி யாரும் வேற்
றுமைத் தொகையாக்கொண்டு பொருள்விரித்தலு
மியலும்.

இனிப் பரணிகள் யாவற்றினுஞ்சிறந்து தலைமை
யெய்தி அவை யனைத்தினுக்குஞ் சூடாமணி யென
மிளிர்தரூஉ மிந்நூலினை யாத்தான் மாவித்துவானாய
சயங்கொண்டா னென்போன். இப்புலவர் பெருமா
னது பிறப்பு வளர்ப்பு வாழ்வுமுதலாயினவற்றுளொன்
றும் நன்கு புலப்படவில்லை. ஆயினும் யாமாராய்ந்த
மட்டிற் றெளிந்தனவற்றை யீண்டெடுத் துரைக்கின்
றாம். இவன் உபயகுலோத்தமனெனவும், அபய
னெனவும், சயதுங்க னெனவும் பலவகைய சிறப்புப்
பெயர்களும் பெற்ற விசயதர சோழனது வாயிலவித்
துவான்கடந் தலைவன். "தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து" என்ற மூதுரையை
மனக்கொளாது தென்னாட்டுப் புலவருட சிலரோர்
போந்து புரிந்த வாதப்போரின்கண் நந்தம் புலவர்பி
ரான் வென்றமை காரணமாகச சயங்கொண்டானெ
னப் பட்டப்பெயர்பெற்றுத் திகழாநிற்புழி விசயதரன்
வடகலிங்கனைத்தொலைத்து வாகைப்பந்தார் மிலைந்து
போந்து சயங்கொண்டானை நோக்கி 'யானுஞ் சயங்
கொண்டானாயினேன்' என்றனன். எனவே 'சயங்
கொண்டான் சயங்கொண்டான்மீது பரணிநூற் புனை

வான்' என்று நம்பாவலர் கோமான் கூறிச் சென்று சின்னாட்களு ளிந்நூலினையியற்றி யரசனதவைக்களத்தே பன்னூற்புலவர்முன் பகர்தந்தரங்கேற்றிய கருதி அவ்வாறே செய்யாநின்றுழி, பரணிநூற் பாடல்களைப் பரிவுகூர்ந்து செவிமடுத்து வீற்றிருந்த வேந்தர் வேந்தன் ஒவ்வொரு தாழிசையினிறுதியினும் ஒவ்வொரு பொற்றெங்கங்காய் பரிசிலாவுருட்டிபு தனகரு அவ் வித்துவான்மீதும் அவனது நூலின்மீது முள்ள அன்பினையு மார்வத்தினையும் வெளிப்படுத்தானென்று கூறுப.

இக்கூற்றினை மெய்யெனக் கொண்டக்காற் சயங் கொண்டானென்பது இந்நூலினையாக்கியோனதியற் பெயரன்றெனல் சொல்லாமே விளங்கும்.

இனித் "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்ற திருவாய்மொழியை யொருதாய்மொழியாக்கொண்டு விசயதரனை நேரே திருமாலெனவே கூறுகின்றனனேனும், இவ்வாசிரியனது சமயஞ்சைவமெனலேயமைவுடைத்து. அஃது இந்நூற கடவுள் வாழ்த்தினுற் றெளிவுபெறக் காண்க. என்னை? திருமான் முதலிய ஏனைய தேவர்கரு முன்னர்ச்சிவபிரானது வணக்கங் கூறப்பட்டிருத்தலானும், உமாதேவி விநாயகர் முருகவேளாகிய இவர் கடகெலலாந் தனித்தனி வெவ்வேறு துதி கூறப்பட்டிருத்தலானும், உமாதேவியினது அம்சமாகிய சத்த மாதர்களது வணக்கங் கூறப்பட்டிருத்தலானுமாமென்பது. இவ்வாறாகவுஞ் சிலர் நான்முகன் மா

லாதி கடவுளர்க்குந் துதி யுடன்கூறுதலிற் சைவசம யத்திற் பற்றுடையானல்லனென வாய்கூசாது மொ ழிவர். ஏனைக் கடவுளர்க்கும் துதி கூறுதல் சைவ சமயிக ளாயினார்தம் மியல்பென்பதும் வைணவராதி புறச்சமயிகளே அவ்வாறு சிவபெருமாறுதி கட வுளர்க்குத் துதிகூறுரென்பதும் இருதிறத்தாரது நூல களையுந் தூககி யொப்ப வாய்குநாக்கு இனிது விளங் கும். அதான்றியு மிந்நூலுடையான் சைவனே யென் பது சிவமூர்த்தங்கட்கெலலாந் துதியுரைத்தமையே யன்றி யம்மூர்த்தத் துதிகளில் விசேடப்பற்றுக் காட்டு மாற்றலுடைய சொற்களைப் பெய்துரைத் தமையினுனே பசுமரததாணி யறைந்தென நாட் டப்படும். இனியித்துணையு முறறு நோக்ககில்லாது இந்நூலாசிரியன் சைவனல்லன் சமரச நன்னிலை யுடையானென அன்னார் துணிந்ததுணிவு ஞானி கள் கழகக்கத்து நகைபுண்டழியு மென்க.

இதுகிடசக. இனி யிசசயங்கொண்டா னிருந்த காலத்தினை வரைந்து கூட்டிய புகுகின்றும். ஒரு சா ராா இவன்றன்காலம கடைச்சங்கத்தார் காலத்துக்குப பிறபட்டதென்பதும கம்பர்காலத்திற்கு முற்பட்ட தென்பதும மட்டுங் கூறலியலுமேயன்றி யின்னயாண் டுகடாம் என்று வரையறுத்துக கூறுதல யாவர்க்கும் முடியாதென்பராயினார். மற்றொருசாரார் சாதகசரி த்திர வாராய்ச்சியின்படி விசயதரன் கலிங்கத்தைவெ ன்றகாலம் கி. பி. 1066-ஆம் ஆண்டிற்கும் 1113-ஆம் ஆண்டிற்கும் உடபட்ட தெனப் புலப்படுகின்ற

தென்பர். ஆயின் ஏறக்குறையச் சாலிவாகன சகாத்தம் 1050-ஆம் யாண்டாகும். "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழன்மேல்" எனுஞ் செய்யுளை மெய்யெனக் கோடலாமெனில் அதிற்கூறியாங்குக் கம்பர் காலம் 807-ஆம் யாண்டாம். அற்றேல் இந்நூலாசிரியனது காலம் கம்பர்தங் காலத்திற்கு இருநூற்றைம்பதியாண்டு பிந்தியதாம். இக்காலவரையறை ஏனைய சான்றுகளொடு முரணுபுகாலத்தை இன்னதெனச் சுட்டவொண்ணுவழியினிற் சிலர்தமை யுய்த்து இடர்ப்படுத்தும். என்னை? 'இந்நூலினது நடை கம்பர் காலத்தினரும் அவர்க்குப்பிந்திய காலத்தினரும் ஆய வரது நடைகளைப்போலாது வடசொற்கள் மிகுதியுங் கலவாத செந்தமிழ் நன்னடையினிற் செய்யப்பட்டுச சங்கச்செய்யுளாய சிந்தாமணி சூளாமணிகளோடு சேர்த்தெண்ணப்படத்தக்க பெருமை வாய்ந்து விளங்குதலி னென்க' வென்பர். அலலதூஉம் அடியார்க்கு நல்லார் இந்நூற செய்யுட்களுட் சிலவற்றைத தமது சிலப்பதிகாரவுரையின்கண் மேற்கொண்டதும இந்நூல கம்பர்காலததினுக்கு முன்னரே பயிலப்பட்டு வந்த தென்பதற்குப் போதிய சான்றாமெனவும் அன்னார கூறுப. இனி மெய்ம்மைவழியா ஞராயப்புகுழ் இந்நூலின்கண்ணே சோழராசரது தலைநகராகக காஞ்சிமாநகரினைக்கூறலானே இஃது உறைந்தை தஞ்சைக ளினின்றும் விலகி அரசனது வாசத்தானம காஞ்சியாயின பின்னரே இந்நூல் யாககப்பட்டிருத்தல் வேண்டுமெனக்கோடலியலும். அன்றியும் கருணாகரத் தொண்டைமான் சென்று கலிங்கநாட்டை வென்ற

னனெனக் கூறுதலிற் சோணாட்டினின்றுந்தொண்டை நாடு வேறுபிரிந்ததூஉம் இக்காலத்தின் கண்ணேயாம் என்பதும் ஏற்படுகின்றது. இக்காரணங்களினனே முன்னர்க்கூறிய சிலாசாதநபரிசோதகர் கூறுநிற்குங் காலக்கணக்கே யொருவாறு வலியுறுகின்றமைகாண்க. இத்துணையும் வாய்வது கம்பர்தங்காலஞ் சாலிவான சகாத்தம் 807-ஆம் யாண்டென்பது நிலைநின்றககாலே யாம். மற்று ஆங்கிலமொழியின்கண் அச்சிட்டுப்போ தரும் * இந்தியபுராதனகலைஞன் என்னும் மாதாந்தப் பத்திரிகையினுற் கி. பி. 1063-ஆம் யாண்டுபட்டத்திற் குப்போந்த இராசேந்திரசோழனிரண்டாவ னென்ற குலோத்துங்கசோழன்முதலாவனும், கி. பி. 1127 - ஆம் யாண்டு பட்டமெய்திய குலோத்துங்கசோழனி ரண்டாவனு மென்ற வீரரசர் கூறப்பட்டுளர். அவர் தமுட குலோத்துங்கசோழன்முதலாவனது காலமே நமது கம்பர்தங் காலமுமேயா மென்பது யாவர்க்கு மொப்பமுடிந்ததாம். ஆகவே கம்பரதுகாலம் பதி னோரா நூற்றாண்டின் பிற்பகுதியென்பது தானே போதரும். இனிக் கலிங்கத்துப்பரணியின் செய்யு ணடை கம்பரது செய்யுணடையினும் எளிதா கவுஞ் சொன்முடிபு பொருண்முடிபுகள் செவ்வாக வாய்ககப் பெறறதாகவும் வடசொறகள் பெரிதும் விரவப்பெற்றதாகவு மிருத்தலிற் கம்பர்காலத்திற்குப் பிந்தியவனே யிந்நூலுடையானென நிராடங்கமாய்ப் பெறப்படுத லறிக. மேலுங கலிங்கத்துப்பரணியின் களம்பாடிய பகுதியில கூகூ - ஆஞ் செய்யுளின்கட்

* The Indian Antiquary, Pages (296 - 299) October, 1894.

'குலோத்துங்கச் சோழனைப் பாடீரே' யெனக்கூறு
தலி னீண்டைக் கூறிய குலோத்துங்கன் கி. பி. 1127-
ஆம் யாண்டி லரசுரிமையெய்திய மன்னனே யென்க.

இவன் குலோத்துங்கன்முதலாவனது பேரனு
மாறும் விசயதரசோழனுமாறுமுய்த்துணர்க. எனவே
**சயங்கொண்டானது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்
றுண்டென்பது** பெற்றும். இதுநிற்க.

இக்கலிங்கத்துப் பரணியினை யியற்றினர் ஒட்டக
கூத்தரென்பது ஒரு சாரார்துணிபு. இதுயாமேற்
கூறிய காரணங்களினுனே சிதையுண்டொழுங்குமா
றுணாக. அன்றியும் ஒட்டக்கூத்தரது செய்யுணடை
யும் இந்நூலினது செய்யுணடையும் வேறுபடுமாறு
மோர்ந்தறிக. மற்று ஒட்டக்கூத்தர் செய்தபரணிக
ளும் வேறுள. அவை அண்டத்துப்பரணியும் பிறவு
மாம். இனிக் **கூத்தன் கவிச்சக்கிரவர்த்தி**யென்ற தமி
ழ்ப்புலவர்செய்த **தக்கயாகப்பரணி** யென்றொரு நூலு
ளது. இக்கூத்தன் கவிச்சககிரவர்த்தியே யொட்டக்
கூத்தரெனச சிலர் கூறுநிற்பர். அஃதெவ்வாறுயினு
மாகுக. இந்நூலினைப் போலவே யதுவும் பகுக
கபபட்டுச சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து
திகழுறுகின்றது. அதற் கோரரிய வரும்பதவுரையு
முளது. அதனை யிப்பரணியினெடு தூககி யாய்குநர்
கரு இரண்டனது நயங்களும் ஏற்றமு மினிது புலப்
படும். விரிவஞ்சி யா மவ்வாறுசெய்யாது விடுத்தனம்.
இதன்கண்ணே பண்டை யரசர்களது சரிதங்கள் பல
கூறப்படுதலின் அவையனைத்துந் தககவாறு ஆராயப்

ப்படிற் சோழராசர்களைப்பற்றி யொருசரித்திரம் வகு பபதற்குப் பெருந்துணைக் கருவியா யிருக்குமென்ப துணர்க.

இந்நூலினைப் பற்றியும் ஆசிரியனைப்பற்றியுங் கூறுதெஞ்சியவற்றை யீண்டெடுத்துரைக்கின்றும். இதனையாக்கிய சயங்கொண்டானது பாக்களனைத்தும் 'சுருங்கச்சொல்ல' லாதியபத்தழகு முள்ளனவாய் விளங்குகின்றன. சொன்னயமும் பொருணயமும் பாடடொறுங்காணலாம். இவன்றன் பாக்கள் சந்த வின்பம் பெரிதும் பயக்கும். 'இழுமெனுமோசைபி னெழுகுறு மருவிபோல்' இவன்றன் செய்யுட்களெல் லாஞ் செல்லுகின்றன. குறிப்புப்பொருளும் இறைச் சிப்பொருளும் உள்ளுறையுவமங்களும் ஆங்காங்குப் பாடல்களிற் காணப்படும். சமயயோசிதமாகச் சொற் களைப் பெய்தலும், கற்பனைசெய்தலும், வீரம்வெகுளி அவலம் அசசம் காமமுதலிய சுவைகளும், அசசுவை கடகேறற ஓசையுடைமையும், எதுகை மோனை நிய மம பிழையாமையும், இடர்ப்படட சொன்முடிபு பொருண்முடிபுகளிலலாமையும், இன்னுமிவைபோல வன பிறசிறப்புக்களும, இந்நூலின்கண்மிகவுமுளளன. மேலும இப்பரணி யாவரானும் மேற்கோளாக எடுத துப் பாராடடத்தகக சிறப்புவாய்ந்த தாமாறு வெள் ளிடை மலையென விளங்குத லறிக. இந்நூலின் கண்ணே ருசு - சந்தபேதங்கள் காட்டபபடுகின்றன. இதனாராய்சசியிறுற பண்டைககாலத்து ஒழுககவழக கஙகளும் நன்னரறியக் கிடக்கும்.

இவைபற்றியன்றே

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
 சயங்கொண்டான் விருத்த மென்னு
மொண்பாவி லுயர்கம்பன் கோவையுலா
 வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
 வசைபாடக் காள மேகம்
பண்பாய பகர்சந்தம் படிக்காச
 லாதொருவற் பகரொ ணாதே"

என்று பிற்காலத்தாராய பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் சிறப்பித்தெடுத்துரைத்ததூஉ மென்க.

இத்துணைச் சிறப்புவாய்ந்த விந்நூல் சென்றபல வருடங்களாகக கவனிக்கப்படா திருந்தமை வியக்கத் தக்கதே. இதனை நிகழும் கி - பி. 1898-ஆம் ஆட்டைப் பிரவேச பரீட்சைக்குப் பாடமாய்ச சர்வகலாசாலையா ரேற்படுத்திப் பலரும் இவ்வரியநூலின் பெருமைகளை விதந்து பாராட்டும் வண்ணஞ் செய்துள ரென்பது யாவருமறியகிற்பர்.

இனிச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை ௬௩-ஆம் பக்கத்திற் காணப்படும்

"மோடி முன்றலையை வைப்ப ரேமுடி
 குலைந்த குஞ்சியை முடிப்பரே
யாடி நின்றுருகு திப்பு துத்திலத
 மம்மு கத்தினி லமைப்பரே"

என்ற தாழிசையும், ௬௩௭ - ஆம் பக்கத்திற் காணப்படும்

"மண்ணி னுளற வறுத்த தங்கடலை
வைத்த பீடிகை வலங்கொள
விண்ணி னுயகிதன் யாக சாலைதொறு
மீள வுஞ்சிலர் மிறைப்பரே"

என்ற தாழிசையுங் கலிங்கத்துப்பரணியின்க ணுள வாகப **பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களான்** மேற்கூறிய பக்கங்களி னடியிற் குறிக்கப்பட்டுள்ளன. எமக்குக்கிடைத்த ஒன்பது வெவ்வேறு கலிங்கத்துப் பரணிப் பிரதியினும் அவ்விரண்டுங் காணப்படாமை யான் அவற்றை நூலினுள்ளே சேர்த்து அச்சிடாது விடுத்தனம்.

இதற்கு முன்னர் இந்நூல இருமுறை யிருவர்க ளா னச்சிடப்பட்டிருப்பினும் அவையிற்றினுட் பிழை களபல பொதுளியிருத்தலையும் பாடங்கள் மாறியிருத் தலையுங கண்ட யாம் எம்பாற் கலவிபயிலுறாஉம் **இயற் றமிழ் மாணவர்,** நம் வேண்டுகோட்கிணங்கிப் பலபிரதி ரூபங்கள தேடிககொண்டு கரலிகித வழூஉக்களைந்து எம்மா லியன்றவளவு மூலபாடத்தை யிருநதவாறே செப்பஞசெய்து பாடபேதங்களைப பக்கங்களினடியிற் குறித்துப் **பிரயோக விளக்கமுஞ் செய்யுண் முதற்குறிப் பகராதியுஞ்** சேர்த்து அச்சிட்டிருககின்றனம். இந்நன் முயற்சியின்கண் எம்மைத் தூண்டுபு கடைபோருமட டுந் தோன்றாத்துணையா யுதவிபுரிந்து நின்ற எல்லாம வலல முழுமுதறகடவுளாய நடராசப் பெருமானை மனமொழி மெய்களிற் றொழுகின்றனம்.

வி. கோ. சூ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கலிங்கத்துப்பரணி.

க. கடவுள் வாழ்த்து.

உமாபதி துதி.

புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
றொழில்காட்டப் புவனவாழ்க்கைச்
செயல்வண்ண நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தைசெய்வாம். (க)

அருமறைக ணெறிகாட்ட வயன்பயந்த
நிலமகளை யண்டங் காக்கு
முரிமையினிற் கைப்பிடித்த வபயகுலோத்
தமனபயன் வாழ்கவென்றே. (உ)

திருமால் துதி.

வேறு.

ஒருவயிற்றிற் பிறவாது
பிறந்தருளி யுலகொடுக்குந்
திருவயிற்றிற் றிருக்குழவித்
திருநாமம் பரவுதுமே. (ங)

அங்கெடுமா லுதரம்போ
லருளுபயன் றனிககவிகை
யிங்கெடுமா நிலமனைத்தும்
பொதிந்தினிது வாழகவென்றே. (௪)

நான்முகன் துதி.

உகநான்கும பொருணான்கு
முபநிடத மொருநான்கு
முகநான்கும் படைத்துடைய
முதல்வனையாம் பரவுதுமே. (௫)

நிலநான்குந் திசை நான்கு
நெடுங்கடல்க ளொருநான்குங்
குலநான்குங் காத்தளிககுங்
குலதீபன் வாழ்கவென்றே. (௬)

சூரியன் துதி.

பேராழி யுலகனைத்தும
பிறங்கவள ரிருணீங்க
வோராழி தனைநடத்து
மொண்சுடரைப பரவுதுமே. (௭)

பனியாழி யுலகனைததும்
பரந்தகலி யிருணீங்கத்
தனியாழி தனைநடததுஞ்
சயதுங்கன் வாழ்கவென்றே. (௮)

கணபதி துதி.

வேறு.

காரணகா ரியங்களின்கட் டறுப்போர் யோகக்
கருத்தெனனுந் தனித்தறியிற் கட்டக் கட்டுண்
டாரணமா னாற்கூடத் தணைந்து நிற்கு
மைங்கரத்த தொருகளிற்றுக் கன்பு செய்வாம். ()

தனித்தனியே திசையானைத் தறிகளாகச்
சயத்தம்பம் பலநாட்டி யொருகூடத்தே
யனைத்துலகுங் கவித்ததெனக் கவித்து நிற்கு
மருட்கவிகைக் கலிப்பகைஞன் வாழ்க வென்றே.

முருகவேள் துதி.

வேறு.

பொன்னிரண்டு வரைதோற்கும் பொருவரிய
நிறம்படைத்த புயமுங் கண்ணும்
பன்னிரண்டு மாறிரண்டும் படைத்துடையா
னடித்தலங்கள் பணிதல் செய்வாம். (கச)

ஓரிரண்டு திருக்குலமு நிலைபெறவந்
தொருகுடைக்கீழ்க் கடலுந் திக்கு
மீரிரண்டு படைத்துடைய விரவிகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே. (சஉ)

நாமகள் துதி.

வேறு.

பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்திருப்ப மிகவுயரத் திருப்ப னென்று

நாமாதுங் கலைமாது மென்னைச் சென்னி
நாவகத்து ளிருப்பாளை *நவிலுவாமே. (௧௫)

எண்மடங்கு புகழ்மடந்தை நல்ல னெங்கோன்
யானவன்பா லிருப்பதுநன் றென்பாள் போல
மண்மடந்தை தன்சீர்த்தி வெள்ளை சாத்தி
மகிழ்ந்தபிரான் வளவர்பிரான் வாழ்க வென்றே.

உமையவள் துதி.

வேறு.

செய்யதிரு மேனியொரு பாதிகரி தாகத்
தெய்வமுத லாயகலை யெய்தசிலை மாரனை
கையின்மலர் பாதமலர் மீதுமணு காநங் [பாம.
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப

†கறுத்தசெழி யன்கழல சிவப்பவனை யேறக்
கார்முகம வளைத்துதியர் கோமகன் முடிக்கட
பொறுத்தமலர் பாதமலர் மீதணிய நலகும
பூழியர் பிரானபயன் வாழ்கவினி தென்றே. (௧௬)

சத்தமாதர்கள் துதி.

வேறு.

மேதி புள்ளலகை தோகை யேறுவணம
வேழ மென்றகொடி யேழுடைச்
சோதி மென்கொடிக ளேழி னேழிரு
துணைப்ப தந்தொழ நினைத்துமே. (௧௭)

---

* "நவிற்றுவாமே" என்றதூஉம் பாடம்.

சேழன் மேழிகலை யாளி வீணைசிலை
கெண்டை யென்றினைய பல்கொடி
தாழ மேருவி லுயர்த்த செம்பியர்
தனிப்பு லிக்கொடி தழைக்கவே. (க௮)

வாழி.

வேறு.

விதிமறை யவர்தொழில் விளைகவே
விளைதலின் முகின்மழை பொழிகவே
நிதிதரு பயிர்வளர் நிறைகவே
நிறைதலி னுயிர்நிலை பெறுகவே. (க௯)

தலமுத லுளமனு வளர்கவே
சயதர னுயர்புலி வளர்கவே
நிலவுமிழ் கவிகையும் வளர்கவே
நிதிபொழி கவிகையும் வளர்கவே. (௨௦)

கடவுள் வாழ்த்து
முற்றிற்று.

௨. கடை திறப்பு.

சூதள வளவெனு மிளமுலைத்
துடியள வளவெனு நுண்ணிடைக
காதள வளவெனு மதர்விழிக்
கடலமு தனையவர் திறமினோ. (௧)

புடைபட விளமுலை வளர்தொறும்
பொறையறி வுடையரு நிலைதளரந்
திடைபடு வதுபட வருளுவீ
ரிடுகத வுயர்கடை திறமினோ. (௨)

சுரிகுழ லசைவுற வசைவுறத்
துயிலெழு மயிலென மயிலெனப
பரிபுர வொலியெழ வொலியெழப்
பணிமொழி யவர்கடை திறமினோ. (௩)

கூடிய வின்கன வதனிலே
கொடைநர துங்கனொ டணைவுறு
ஊடிய நெஞ்சினொ டேடுவீ
ருமது நெடுங்கடை திறமினோ. (௪)

வேறு.

விடுமி னெங்கடுகில விடுமி னென்றுமுனி
வெகுளி மென்குதலை துகிலினைப்
பிடிமி னென்றபொருள் விளைய நின்றருள்செய்
பெடைந லீர்கடைக டிறமினோ. (௫)

எனத் டங்கவின் வளவ துங்கனரு
ளௌனம கிழ்ந்திரவு கனவிடைத்
தனத டங்கண்மிசை நகந டந்தகுறி
தடவு வீர்கடைக டிறமினோ. (கூ)

வேறு.

முனிபவ ரொத்திலராய் முழுவல கிளைதலுமே
*முகிணகை பெற்றமெனு †மகிணர் மணித்துவர்
கனிபவ ளத்தருகே வருதலு முத்துதிருங் [வாய
கயலக ளிரண்டுடையீர் கடைதிற மின்றிறமின்.

இதத்துயின் மெய்த்துயிலே யென்று ‡குறித்திளைஞோ
ரிதுபுல விகுமருந் தெனமனம் வைத்தடியிற
கைத்தலம் வைத்தலுமே பொய்த்துயில கூர்நயனக
கடைதிற வாமடவீர் கடைதிற மின்றிறமின். ()

வேறு.

இகலி மூந்தரசர தொழுவ ருமபயனி
யிரவு கந்தருபு கனவினிற்
பகலி மூந்தநிறை பெறமு யன்றுமொழி
பதறு வீர்கடைக டிறமினோ. (கூ)

வேறு.

முத்து வடமுசேர §முகிண்முலைமேல்
முயங்குங் கொழுநா மணிசெவ்வாய்

---

* "முகிழ்நகை" எனவும், † "மகிழ்நர்" எனவும் பாடம்.
‡ "குறுத்திளைஞோர்" என்றதூஉம் பாடம்.
§ "முகிழ்முலை" என்றும் பாடம்.

வைத்த பவள வடம்புனைவீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ. (கo)

வேறு.

தண்கொடை மானதன் மார்புதோய்
தாதகி மாலையின் மேல்விழுங்
கண்கொடு போம்வழி தேடுவீர்
கனக நெடுங்கடை திறமினோ. (கக)

வேறு. சிலேடை

அருசியே கயல்செடக் கூடலிற் பொருதுசென்
றணிகடைக் குழையிலே விழவடர்த்தெறிதலால
வஞ்சிமா னதன்விடுஞ் சேனையிற் கொடியகண்
மடநலீ ரிடுமணிக கடைதிறந் திடுமினோ. (க௨)

அவசமுற் றுளநெகத் துயினெகப் பவளவா
யணிசிவப் பறவிழிக் கடைசிவப் புறநிறைக
கவசமற் றிளநகைக களிவரக் களிவருங்
கணவரைப் புணருவீர் கடைதிறந் திடுமினோ. ()

வேறு.

கலவிக களியின் மயககத்தாற்
கலைபோ யகலக் கலைமதியி
னிலைவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்
நீள்பொற் கபாடந் திறமினோ. (கச)

கயல் = மீன்க்கொடி, கயல்போன்றகண்
கூடல் = மதுரை - புணர்தல்
[illegible]

வேறு.

நனவினிற சயதரன் புணரவே பெறினுநீர்
நனவெனத் தெளிவுறா ததனையும் பழையவக
கனவெனக கூறுவீர் தோழிமார் நகைமுகங்
கண்டபின் றேறுவீர் கடைதிறந் திடுமினோ. (கரு)

வேறு.

மெய்யே கொழுநா பிழைநலிய
வேட்கை நலிய விடியளவும்
பொய்யே யுறங்கு மடநல்லீா
புனைபொற் கபாடந் திறமினோ. (கசு)

போக வமளிக களிமயக்கிற
புலாந்த தறியா தேகொழுந
ராக வமளி மிசைததுயிலவீ
ரம்பொற கபாடந் திறமினோ. (கஎ)

ஆளுங் கொழுநா வரவுபாரத்
தவாதம வரவு காணுமற
ருளு மனமும் புறம்பாகச
சாததுங் கபாடந் திறமினோ. (கஅ)

உந்திச சுழியின் முளைத்தெழுந்த
வுரோமப் பசுந்தா ளொன்றிலிரண்
டந்திக கமலங் கொடுவருவீ
ரம்பொற் கபாடந் திறமினோ. (ககூ)

வேறு.

மீனம்புகு கொடிமீனவா
விழியம்புக வோடிக
கானம்புக வேணம்புக
மடவீர்கடை திறமின். (௨0)

அலைநாடிய புனனாடுடை
யபயற்கிடு திறையான்
மலைநாடியர் துளுநாடியர்
மனையிற்கடை திறமின். (௨௧)

வேறு.

விலையி லாதவட முலையி லாடவிழி
குழையி லாடவிழை கணவர்தோண்
மலையி லாடிவரு மயிலகள் போலவரு
மடநலீர்கடை திறமினோ. (௨௨)

வேறு.

மழலைத்திரு மொழியிற்சில
வடுகுஞ்சில தமிழுங
குழறித்தரு கருநாடியா
குறுகிக்கடை திறமின். (௨௩)

வேறு.

தழுவுங கொழுநா பிழைநலியத்
தழுவே லென்னத் தழுவியகை
வழுவ வுடனே மயங்கிடுவீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ. (௨௪)

வேகம் விளைய வருங்கொழுநர்
மேனி சிவந்த படிநோக்கிப்
போகம் விளைய நகைசெய்வீர்
புனைபொற் கபாடந் திறமினோ. (உரு)

வேறு.

செருகு கொந்தளக மொருகை மேலலைய
வொருகை கீழலைசெய் துகிலொடே
திருவ னந்தலினு முகமலர்ந்துவரு
தெரிவை மீர்கடைக டிறமினோ. (உசு)

வேறு.

முலைமீது கொழுநன்ற னகமேவு குறியை
முன்செல்வ மில்லாத வவர்பெற்ற பொருள்போற்
கலைநீவி யாரேனு மில்லாவி டத்தே
கண்ணுற்று நெஞ்சுநக வரிப்பீர்க டிறமின். (உஎ)

வேறு.

கடலில விடமென வமுதென மதனவேள்
கருதி வழிபடு படையொடு கருதுவா
ருடலி னுயிரையு முணர்வையு நடுவுபோ
யுருவு மதர்விழி யுடையவர் திறமினோ. (உஅ)

வேறு.

முறுவன் மாலையொடு தரள மாலைமுக
மலரின் மீதுமுலை முகிழினுஞ்
சிறுநி லாவுமதின் மிகுநி லாவுமென
வருந லீர்கடைக டிறமினோ. (உகூ)

வேறு.

முருகிற் சிவந்த கழுநீரு
முதிரா விளைஞ ராருயிருந்
திருகிச *செருகுங் குழன்மடவீர்
செம்பொற் கபாடந் திறமினோ. (௬0)

வேறு.

மெய்யி லணைத்துருகிப் பைய வகன்றவர்தா
மீள்வ ரெனக்கருதிக் கூடல் வளைத்தறவே
கையி லணைத்தமணற் கண்களி சோருமெனக்
களைய விழுந்தழுவீர் கடைதிற மின்றிறமின்.

வேறு.

செருவிளை நீபட வெம்முலைச
செவ்விள நீர்படு சேயரிக
கருவிளை நீர்பட வூடுவீர்
கனக நெடுங்கடை திறமினோ. (௬௨)

வேறு.

அளக பாரமிசை யசைய மேகலைக
ளவிழ வாபரண மிவையெலா
மிளக மாமுலைக ளிணைய ருமலவரு
மியன லீர்கடைக டிறமினோ. (௬௩)

* "சொருகும்" என்பதூஉம் பாடம்.

வேறு.

மதுர மானமொழி பதற வாளவிழி
சிவப்ப வாயிதழ் வெளுப்பவே
யதர பானமது பான மாகவறி
வழியு மாதர்கடை திறமினோ. (௫௪)

வேறு.

தங்குகண் வேலைசெய்த புண்களைத்
தடமுலை வேதுகொண் டொற்றியும்
செங்கனி வாய்மருந் தூட்டுவீர்
செம்பொ னெடுங்கடை திறமினோ. (௫௫)

வேறு.

பொருங்கண் வேலிளைஞ ரார்பி னூடுருவு
புண்க ளூரவிரு கொங்கையின்
கருங்கண் வேதுபட வொற்றி மென்கைகொடு
கட்டு மாதர்கடை திறமினோ. (௫௬)

வேறு.

இடையி னிலையறி திறமிது மெனவெழா
வெமது புகலிட மினியிலை யெனவிழா
வடைய மதுகர மெழுவது மவிழ்வதா
மளக வனிதையா ரணிகடை திறமினோ. (௫௭)

வேறு.

உபய தனமசைய வொசியு மிடைநடையை
யொழியு மொழியுமென வொண்சிலம்
பபய மபயமென வலறு நடையபிலு
மரிவை மீர்கடைக டிறமினோ. (௫௮)

வேறு.

பூவிரி மதுகர நுகரவும
பொருகய லிருகரை புரளவுந்
காவிரி யெனவரு மடநலீர்
கனக நெடுங்கடை திறமினோ. (௩௯)

வேறு.

குலாவு வண்டலம்பிடு கலக கொண்டைகளின்
மதியெ ழுந்துகனல சொரியுமென்
றளக பந்திமிசை யளிகள் பந்தரிடு
மரிவை மீர்கடைக டிறமினோ. (௪0)

வேறு.

வாயிற் சிவப்பை விழிவாங்க
மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத்
தோய்க கலவி யமுதளிப்பீர்
துங்கக் கபாடந் திறமினோ. (௪௧)

வேறு.

கோடு மிளம்பிறையிற் குறுகிய முத்துதிரக்
கொங்கை வடம்புரளச் செங்கழு நீரளகக்
காடு குலைந்தலையக் கைவளை பூசலிடக்
கலவி விடாமடவீர் கடைதிற மின்றிறமின். (௪௨)

வேறு.

காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த
கலவி மடவீர் கழற்சென்னி
காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ. (௪௩)

இலங்கை யெறிந்த கருணா கரன்ற
னிகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்
கலிங்க மெறிந்த கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ. (சச)

வேறு.

பேணுங் கொழுநர் பிழைகளெலாம்
பிரிந்த பொழுது நினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப்பொற் கபாடந் திறமினோ. (சரு)

வேறு.

வாச மாமுலைகண் மார்பி லாழ்ந்து
மாலை தாழ்குழலின் வண்டெழுந்
தூச லாடவிழி பூச லாடவுற
வாடு வீர்கடைக டிறமினோ. (சசா)

வேறு.

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கு மடநல்லீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ. (சஎ)

பொங்கு மதிக்கே தினநடுங்கிப்
புகுந்த வறையை நிலவறையென்
றங்கு மிருக்கப் பயப்படுவீ
ரம்பொற் கபாடந் திறமினோ. (சஅ).

வருவார் கொழுந ரெனத்திறந்தும்
வாரார் கொழுந ரெனவடைத்துந்
திருகுங் குடுமி விடியளவுந்
தேயுங் கபாடந் திறமினோ. (௪௯)

வேறு.

ஊடு வீர்கொழுநர் தங்கள் பான்முனி
வொழிந்து கூடுதலி னுங்களைத்
தேடு வீர்கடைக டிறமி னோவினிய
தெரிவை மீர்கடைக டிறமினோ. (௫௦)

வேறு.

பண்படு கிளவியை யமுதெனப்
பரவிய கொழுநனை நெறிசெயக
கண்கொடு கொலைசெய வருளுவீர்
கனக நெடுங்கடை திறமினோ. (௫௧)

வேறு.

பிழைநி னைந்துருகி யணைவு றுமகிழ்நா*
பிரித லஞ்சிவிடு கண்கணீர்
மழைத தும்பவிர றளையி லேயெழுது
மடந வீர்கடைக டிறமினோ. (௫௨)

வேறு.

நககாரு சிகரும் வடமலைக்கு
நடுவில வெளிக்கே வேடனைவிட

---

* "மகிணர்" என்றதூஉம் பாடம்.

டககா னகத்தே யுயிர்பறிப்பீ
ரம்பொற் கபாடந் திறமினோ. (௫௩)

சேககச சிவந்த கழுநீருஞ்
செகத்தி லிளைஞ ராருயிரு
மொக்கச *செருகுங குழன்மடவீ
ரும்பொற் கபாடந் திறமினோ. (௫௪)

கடைதிறப்பு முற்றிற்று.

ஆகத்தாழிசை-௭௪.



* "செருகும்" எனவும் பாடம்.

௩. காடு பாடியது.

களப்போர் விளைந்த கலிங்கத்துக்
கலிங்கர் நிணக்கூழ் களப்பேயி
னுளப்போ திரண்டு நிறைவித்தா
ளுறையுங் காடு பாடுவாம். (௧)

வேறு.

பொரிந்த காரை கரிந்த சூரை
புகைந்த வீரை யெரிந்தவே
யுதிர்ந்த பாரை யெறிந்த பாலை
யுலர்ந்த வோமை கலந்தவே. (௨)

உதிர்ந்த வெள்ளி லுணங்கு நெல்லி
யொடுங்கு துள்ளி யுலர்ந்தவேல்
பிதிர்ந்த முள்ளி சிதைந்த வள்ளி
பிளந்த கள்ளி பரந்தவே. (௩)

வற்றல வாகை வறந்த கூகை
மடிந்த தேறு பொடிந்தவே
முற்ற லீகை முளிந்த வீண்டு
முரிந்த புன்கு நிரைந்தவே. (௪)

வேறு.

தீய வகைகொடிய கான கத்தனை
திறந்த வாய்தொறு நுழைந்துதன்
சாயை புக்கவழி யாதெ னப்பரிதி
தன்க ரங்கொடு திளைக்குமே. (௫)

ஆடு கின்றசிறை வெம்ப ருந்தினிழ
லஞ்சி யக்கடு வனத்தைவிட்

டோடு கின்றநிழ லொகரு நிற்குநிழ
லோரி டத்துமுள வல்லவே. (சு)

ஆத வம்பருகு மென்று நின்றநிழ
லங்கு நின்றுகுடி போனதப்
பாத வம்புனல பெறுது ணங்குவன
பருகு நம்மையென வெருவியே. (எ)

வேறு.

செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்
பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப்
பல்ல தொப்புறு வதனி டைப்புறு. (அ)

தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து வந்துசெந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினா னக்கி விக்குமே. (கூ)

இந்நி லத்துளோ ரேக லாவதற்
கெளிய தானமோ வரிய வானுளோ
ரந்நி லத்தின்மேல் வெம்மை யைகுறித்
தல்ல வோநிலத் தடியி டாததே. (க0)

வேறு.

இருபொழுது மிரவிபரிக்கும் புரவிவிசும்
பியங்காத தியமல்
வொருபொழுதும் மயங்கினவே.
கரிதணங்கிரடுபாடியது முற்றிற்று (கக)

காடுதனைக் கட ஆகத் தாழிசை-கககூ.

வெண்ப

லோடியிளைத் துடல்வியர்த்த வியாவன்றே
வுகுபுனலும் பனிபு மையோ. (கஉ)

விம்முகடு விசைவனத்தின் வெம்மையினைக
குறித்தன்றே விண்ணோர் விண்ணின்
மைமமுகடு முகிற்றிரையிட் டமுதவட்ட
மாலவட்ட மெடுப்ப தையோ. (கங)

வேறு.

நிலம்புடைபேர்ந் தோடாமே
நெடுமோடி நிறுத்தியபேய்
புலமபொடுநின் றுயிர்ப்பனபோற்
புகைந்துமரங் கரிந்துளவால். (கச)

வறறியபேய் வாயுலாந்து
*வறணுக்கை நீட்டுவபோல்
முறறியநீண் மரப்பொதும்பின்
† முதுபாமபு ‡புறம்படுமே. (கரு)

விழிசுழல வருபேய்த்தோ
மிதந்துவரு நீரந்நீர்ச
சுழிசுழல வருவதெனச
சூறைவளி சுழன்றிடுமால. (கசா)

வே[illegible]

சிதைந்துவுடற் [illegible] மைநடு [illegible]யைச சூறை
[illegible]த்[illegible]யழி யாதெ னப்பரிதி [illegible]ரியாற் செம்மை
[illegible]ணக ரங்கொடு திளைக்குமே.

[illegible]ன்றசிறை வெம்ப ருந்தினிழ [illegible] வாரு முனர்
‡ [illegible]ஞ்சி யக்கடு வனத்தைவிட் [illegible]தய்.

புதைந்தகனிற் புகைபோர்த்த தழலே போலும்
போலாவேற் பொடிமூடு தழலே போலும். (கஎ)

மண்ணேடி யறவறந்து துறந்துங் காந்த
வாய்வழியே வேய்பொழியு முத்த மவ்வேய
கண்ணேடிச சொரிகின்ற கண்ணீ ரன்றேற்
கண்டிரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும்.

வெடித்தகழை விசைதெறிப்பத் தனைமேன் முத்தம
வீழ்ந்தனவத் தனைபுழுங்கி யழன்று மேன்மேற
பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும் போலும்
போலாவேற் கொப்புளங்கள் போலும் போலும்.

பல்காற்றின் டிரைக்கரங்க டனையின் மேன்மேற
பாய்கடல்க ணூக்குமதப் படர்வெங் கானிற
செல்காற்று வாராமற காக்க வன்றே
திசைக்கரியின் செவிக்காற்று மற்றே யன்றே.

முள்ளாறுங் கலலாறுந் தென்ன ரோட
முன்னொருநாள் வாளபயன் முனிந்த போரின
வெள்ளாறுங் கோட்டாறும் புகையான் மூட
வெந்தவன மிந்தவன மொக்கி லொக்கும். (உக)

வேறு.

அணிகொண்ட குரங்கினங்க
ளலைகடலுக் கப்பாலே
மணலொன்று காணமல்
வரையெடுத்து மயங்கினவே. (உஉ)

காடுபாடியது முற்றிற்று

ஆகத் தாழிசை-கஉ.

௪. கோயில் பாடியது.

ஓதி வந்தவக் கொடிய கானகத்
துறைய ணங்கினுக் கயன்வ குத்தவிப்
பூத லம்பழங் கோயி லென்னினும்
புதிய கோயிலுண் டதுவி ளம்புவாம். (௧)

வட்ட வெண்குடைச் சென்னி மானதன்
வாளின் வாயினுன் மறலி வாயிடைப்
பட்ட மன்னர்தம் பட்ட மங்கையர
பரும ணித்திருக கருவி ருத்தியே. (௨)

துவர்நி றக்களிற் றுதிய ரேவலிற்
சுரிகை போர்முகத் துருவி நேரெதிர்த்
தவர்நி ணத்தொடக குருதி நீர்குழைத்
தவர்க ருந்தலைச் சுவர டுக்கியே. (௩)

அறிஞர் தம்பிரா னபயன் வாரண
மரசர் மண்டலத் தரண றப்பறித்
தெறித ரும்பெருங் கருணை யம்புகொண்
டெழுது தூணெடுத் திரமி யற்றியே. (௪)

கடித ழிந்துபோர் மிதிலை யிற்படுங்
கரிம ருப்பினைத் திரடு லாமெனும்
படிப ரப்பியப் பழுவி யானையின்
பழுவெ லும்பினிற் பாவ டுக்கியே. (௫)

மீளி மாவுகைத் தபயன் முன்னொர்நாள்
விருத ராசனைப் பொருது கொண்டபோ

ராளி வாரணங் கேழல் சீயமென்
றவைநி ரைத்தநா சிகைமி ருத்தியே. (௬)

துங்க *பத்திரிச செங்க ளத்திடைச்
சோளி சேகரன் வாளெ றிந்தபோர
வெங்க தக்களிற் றின்க டத்திழல்
வெளிய டங்கவே மிசைக வித்தவே. (௭)

வேறு.

கோள்ளிவாய்ப் பேய்காக்குங்
கோபுரமு நெடுமதிலும்
வெள்ளியாற் சமைத்ததென
வெள்ளெலும்பி னாற்சமைத்தே. (௮)

காரிரும்பின் மகரதோ
ரணமாகக் கதப்பேய்க
ளோரிரண்டு கீழ்நாட்டி
யோரிரும்பே மிசைவளைத்தே. (௯)

வேறு.

மயிற்கழுத்துங் கழுத்துரிய மலர்ந்தமுகத்
தாமரையு மருங்குசூழ்ந்த
வெயிற்கழுத்து நிணக்கொடியு மிளங்குபூ விட
பசுந்தலையு மெங்குந் தூக்கி. (௧0)

பணியாத வழுதியர்தம் பாய்களிற்றின்
செவிச்சுளகு பலவுந் தூக்கி
மணியூச லெனமதுரை மகரதோ
ரணம்பறித்து மறித்து நாட்டி. (௧௧)

---

*"பத்திரைச்" என்றும் பாடம்.

பரிவிருத்தி யலகிட்டுப் பைங்குருதி
நீர்தெளித்து நிணப்பூச் சிந்தி
யெரிவிழித்த வீமவிளக் கெம்மருங்கு
மேற்றியதோ ரியல்பிற் றாலோ. (கஉ)

வேறு.

சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்
தருகவரம் வரத்தினுக்குத் தக்க தாகப்
பலியாக வுறுப்பரிந்து தருது மென்று
பரவுமொலி கடலொலிபோற் பரக்கு மாலோ.

சொலலரிய வோமத்தீ வளர்ப்ப ராலோ
தொழுதிருந்து பழுவெலும்பு தொடர வாங்கி
வலலெரியின் மிசையெரிய விடுவ ராலோ
வழிகுருதி நெய்யாக வளர்ப்ப ராலோ. (கச)

அடிக்கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
வரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ. (கரு)

நீண்டபலி பீடத்தி லரிந்து வைத்த [ணி
நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் னினமென் றெண்
யாண்டலைப்புள் ளருகணைந்து பார்க்கு மாலோ
வணைதலுமச் சிரமச்ச முறுத்து மாலோ. (கசா)

வேறு.

கடனமைந்தது கருந்தலை யரிந்தபொழுதே
கடவதொன்றுமிலை யென்றுவிளை யாடுமுடலே
யுடலவிழுந்திட நுகர்ந்திடவும் வந்துசிலபே
யுறுபெரும்பசி யுடன்றிட வுடன்றிரியுமே. (கஎ)

பகடிடந்துகொள பசுங்குருதி யின்றுதலைவி [வான்
பலிகொளென்றகுர லெண்டிசை பிளந்துமிசை
முகடிடிந்துரு மெறிந்தன முழங்கவுடனே [வே.
மொகுமொகென்றொலி மிகுந்தமரு கங்கள்பல

வேறு.

தமருகங்கட்டு கின்றசதி
யின்கண்வருவா
ரமரியின்புறு மனுதிவரு
சாதகர்களே. (க௯)

படைவலங்கொடு பசுந்தலை
யிடங்கொடணைவா
ரிடைமொழிந்திடை நுடங்கவரும்
யோகினிகளே. (உ0)

வேறு.

வீங்குதலை நெடுங்கழியின் மிசைதோறுந்
திசைதோறும் விழித்து நின்று
தூங்குதலை சிரிப்பனகண் டிறங்குதலை
மறந்திருக்குங் குழற்கட் சூர்ப்பேய். (உக)

அரிந்ததலை யுடனமர்ந்தே யாடுகழை
யலைகுருதிப் புனலின் மூழ்க
விருந்தவுடல் கொளக்கால னிடுகின்ற
நெடுந்தூண்டி லென்னத் தோன்றும். (உஉ)

வேறு.

கோல்வா யோரி முழவாகக்
கொள்ளி வாய்ப்பேய் குழலிக்கு

கல்வாய்ச் செய்ய தசைதேடி
 கலிவாய்த் தசையைப் பறிக்குமால். (உரு)

நிணமுந் தசையும் பருந்திசிப்ப
 நெருப்பும் பருத்தி யும்போன்று
பிணமும் பேயுஞ் சுடுகாடும்
 பிணங்கு நரியு முடைத்தரோ. (உசு)

கோயில்பாடியது முற்றிற்று.

ஆகத் தாழிசை - கஉ0.



௫. தேவியைப் பாடியது.

உவையுவை யுளவென் றெண்ணி
யுணர்ப்பதெ னுரைக்க வந்த
வவையவை மகிழ்ந்த மோடி
யவயவம் விளம்பல் செய்வாம். (௧)

வேறு.

ஒருமலை மத்துவலத் துலவு கயிற்றினுமு
றுலகு பரித்தபணத் துரக வடத்தினுமப்
பருமணி முத்துநிரைத் துமணி தைத்தவிணைப
பரிபுரம் வைத்ததளிர்ப் பதயுக ளத்தினளே. (௨)

அருமறை யொத்தகுலத் தருணெறி யொத்தகுணத்
தபய னுதித்தகுலத் துபய குலத்துமுகற்
றிருமதி யொக்குமெனத் தினகர னொக்குமெனத்
திகழ்வத னத்தினிடைத் திலக வனப்பினளே. ( )

அரவொடு திக்கயமப் பொழுது பரித்தவிடத்
தடியிட வுட்குழியிட் டசைவுற மப்பொழுதிற்
றரணி தரித்ததெனப் பரணி பரித்தபுகழச்
சயதர னபயபரவிச் சதிகொ ணடத்தினளே. (௪)

தணிதவ ளப்பிறையைச் சடைமிசை வைத்தவிடைத்
தலைவர் வனத்தினிடைத் தனிநுகர் தற்குநினைத்
தணிதவ ளப்பொடியிட் டடைய விலைச்சினையிட
டமுத மிருத்தியசெப் பனைய தனத்தினளே. (௫)

பரிவக லத்தழுவிப் புணர்கல விக்குருகிப்
படர்சடை முக்கணுடைப் பரமர் கொடுத்தகளிற்
றுரிமிசை யக்கரியிற் குடரொடு கட்செவியிட்
டொருபுரி யிட்டிறுகப் புனையு முடுக்கையளே. ()

கலைவள ருத்தமனைக் கருமுகி லொப்பவனைக்
கரட கடகடவுட் கனக நிறத்தவனைச்
சிலைவளை வுற்றவுணத் தொகைசெக விட்டபரித்
திறலவ னைத்தருமத் திருவுத ரத்தினளே. (எ)

கவள மதககரடக கரியுரி வைத்தவிற
களிறு விருப்பறுமக் கனக முலைத்தரளத்
தவள வடத்திடையிற் பவளமொ டொத்தெரியத்
தழலுமி ழுத்தரியத் தனியுர சுத்தினளே. (அ)

அரியு மிடற்றலையிட டலைகுரு திக்கெதிர்வைத்
தறவு மடுத்தசிவப் பதனை முழுத்திசையிற்
கரிகர டத்தொளையிற் கலுழி யிடைக்கழுவிக்
கருமை படைத்தசுடர்க் கரகம லத்தினளே. (௯)

சிமய வுளைககனகத் திரளுரு கப்பரவைத்
திளைசுவ மிபபுகையத் திசைசுடு மப்பொழுதத
திமய வளைத்தகைதற் கிருளு மிடற்றிறைவற்
கினிய தரத்தமுதக் கனியத ரத்தினளே. (௰)

உருகுத லொத்துலகத் துவமை யறச்சுழல்வுற்
றுலவு விழிக்கடைபட் டடல்பகை யற்றொழியத்
திருகு தலைக்குழலிச் சிறுகுத லைப்பவளச்
சிறுமுறு வற்றரளத் திருவத னத்தினளே. (௧௧)

வேறு.

அண்டமுறு குலகிரிக
ளவளொருகா லிருகாதிற்
கொண்டணியிற் குதம்பையுமாங்
கோத்தணியின் மணிவடமாம். (கஉ)

கைம்மலராமே லம்மனையாங்
கந்துகமாங் கழங்குமா
மம்மலைகளவள் வேண்டி
னாகாத தொன்றுண்டோ. (கங)

பந்து.

தேவியைப்பாடியது முற்றிற்று.

ஆகத் தாழிசை - கங

கூ. பேய்களைப்பாடியது.

எவ்வணங்கு மடிவணங்க
விப்பெருமை படைத்துடைய
வவ்வணங்கை யகலாத
வலகைதனை யினிப்பகர்வாம். (க)

வேறு.

பெருநெ டும்பசி பெய்கல மாவன
பிற்றை நாளின்முன் னாளின் மெலிவன
கருநெ டும்பனங் காடு முழுமையுங்
காலுங் கையு முடையன போல்வன. (உ)

வன்பி லத்தொடு வாதுசெய் வாயின
வாயி லூணிறை யாத வயிற்றின
முன்பி ருக்கின் முகத்தினு மேற்செல
மும்மு ழப்படு மம்முழந் தாளின. (ங)

வெற்றெ லும்பை நரம்பின் வலித்துமேல
வெந்தி லாவிற கேய்ந்த வுடம்பின
கொற்ற லம்பெறு கூழில மெங்களைக்
கொள்வ தேபணி யென்று குரைப்பன. (ச)

உள்ளொ டுங்கி யிரண்டுமொன் றாகவே
யொட்டி யொட்டு விடாத கொடிற்றின
கொள்ளி கொண்டிரண் டேவிளை *யுள்புகிற்
†குன்றி தோன்றுவ போல விழிப்பன. (ரு)

---

* "யுட்புகிற்" எனவும் பாடம்.
† "குன்று" எனலும் வேறுபாடம்.

வற்ற லாக வுலர்ந்த முதுகுகண்
மரக்க லத்தின் மறிபுற மொப்பன
வொற்றை வான்றலைப் புற்றெனப் பாம்புட
னுடும்பு ‡முள்புக் குறங்கிடு முந்திய. (௬)

பாந்த ளூறல்வன போலு முடன்மயிர்ப்
பாசி பட்ட பழந்தொளை மூக்கின
வாந்தை பாந்தி யிருப்பத் துரிஞ்சில்புக்
கங்கு மிங்கு முலாவு செவியன. (௭)

கோடடு மேழியுங் கோத்தன பலவின
கோம்பி பாம்பிடை கோத்தணி தாலிய
தட்டி வானத் தகர்க்குந் தலையின
தாழ்ந்து மார்பிடைத் தட்டு முதட்டின. (௮)

அட்ட மிடட நெடுங்கழை காண்கிலென்
னன்னை யன்னையென் றாலுங் குழவிய
வொட்ட வொட்டகங் காண்கிலென் பிள்ளையை
யொகக்கு மொகக்குமென் றுகககலை கொள்வன.()

புயல லிபபன மேலு மளித்திடும்
பொறக ரத்தப யன்புலி பின்செலக,
கயலொ ளித்த கடுஞ்சுரம் போலகங்
காந்து வெமபசி யிறபுறந் தீந்தவும். (௧0)

துஞ்ச லுக்கணித் தாமென முன்னமே
சொன்ன சொன்ன துறைதொறும் பேயெலா
மஞ்ச லித்தொரு காலுக லாமலவ்
வணங்கி னுக்கரு காக விருககவே. (௧௧)

‡ “முட்புக்” என்றும் பாடங்கொள்வர்.

ஆனைச சீறு களிற்றப யன்பொரு உ
மக்க ளத்தி லரசர் சிரஞ்சொரீஇ
மூளைச் சேற்று வழுக்கலில் வீழ்ந்தற வழுக்கி விழுந்திட
மொழிபெ யர்ந்தொரு கான்முட மானவும்.(கஉ)

அந்த நாள்க் களத்தடு கூழினுக்
காய்ந்த வெண்பல் லரிசி *யுரற்புக
வுந்து போதினிற் போதகக் கொம்பெனு
முலக்கை பட்டு வலக்கை ‡சொற் றனவும்.(கரு)

விருத ராச பயங்கரன் முன்னொர்நாள்
வென்ற சக்கிரக் கோட்டத் திடைக்கொழுங்
குருதி யுங்குட ருங்கலந் தட்டவெங்
கூழ்தெ றித்தொரு கண்குரு டானவும். (கச)

வண்டல பாய்பொன்னி நாடனை வாழ்த்திமா
மதுரை வெங்களத தேமது ரிககவுட
டுண்ட கூழொடு நாவுஞ் சுருண்டுபுக
குள்வி ழுந்தற வூமைக ளானவும. (கரு)

ஆனை சாய வடுபரி யொன்றுகைத்து
தத்த டைப்பரு வத்தப யன்பொரு உ
சேனை வீரர்நின் றார்த்திடு மார்பயினிற்
றிமிரி வெங்களத் திற்செவி டானவும. (கசா)

பண்டு தென்னவர் சாய வதற்குமுன்
பணிசெய் பூத கணங்க ளனைத்தையுங

* "யுரல்புக" எனவும் படிக்கவிடமுண்டு.
‡ "சொத்தானவும்" எனவும், "சொட்டானவும்" என வும் பாடபேதங்களுள.

கொண்டு வந்தபேய் கூடிய போதிலிக
குமரி மாதர் பெறக்குற ளானவும். (கஎ)

பரக்கு மோதக் கடார மழித்தநாள்
பாய்ந்த செம்புன லாடியு நீந்தியுங்
குரக்கு வாதம் பிடித்த விதத்தினிற்
குடிய டங்கலுங் கூன்முது கானவும். (கஅ)

சிங்க ளத்தொடு தென்மது ராபுரி
செற்ற கொற்றவன் வெற்றிகொள் காலையே
வெங்க ளத்தி லடுமடைப பேய்கதுலம
வேலை புக்கு விரல்க டிறந்தவும். (க௯)

பேய்களைப்பாடியது முற்றிற்று.

ஆகத் தாழிசை - க௫௨

எ. இந்திரசாலம்.

இவ்வண்ணத் திருத்திறமுந் தொழுதிருப்ப
வெலும்பின்மிசைக் குடர்மென் கச்சிற்
செவ்வண்ணக் குருதிதோய் சிறுபூதத்
தூபக்காற் றொட்டி விட்டே. (௧)

பிணமெத்தை யாஞ்சடுக்கிப் பேயணையை
முறித்திட்டுத் தூய வெள்ளை
நிணமெத்தை விரித்துயர்ந்த நிலாத்திகழும்
பஞ்சசய னத்தின் மேலே. (௨)

கேடாதப்பு கெடுஞ்செழியா கெடும்பொழுதி
விடும்பிண்டி பால மேந்தி
யிடாகினிக ளிருமருங்கு மீச்சோப்பிப
பணிமாற விருந்த போழ்தின். (௩)

வேறு.

அடறுக வெலும்பெடுத்து நரம்பிற் கட்டி
யடிக்கடியும் பிடித்தமரின் மடிந்த வீரர்
குடர்சூடி நிணச்சட்டை யிட்டு நின்ற
கோயிறு யகிடும்பேய் கும்பிட் டாங்கே. (௪)

சுரகுருவின் றூதாகி யமன்பாற் செலவோன்
றுணித்துவைத்த சிரமன்று தின்ற பேயைச்
சிரமரிய வதற்குறவா யொளித்துப் போந்த
சிலபேயைத் திருவுள்ளத் தறிதி யென்றே. (௫)

அப்பேயி னொருமுதுபேய் வந்து நின்றிங்
கடியேனை விண்ணப்பஞ் செய்க வென்ற
திப்பேயிங் கொருதீங்கு செய்த தில்லை
யென்கொலோ திருவுள்ள மென்னக் கேட்டே.

வேறு.

அழைக்க வென்றலு மழைக்க வந்தணுகி
யஞ்சி யஞ்சியுன தாணையிற்
பிழைக்க வந்தனம் பொறுத்தெ மக்கருள்செய்
பெண்ணை ணங்கென வணங்கவே. (எ)

அருந்ததிப் பிறப்பிழை நினைத்த கூளியை
யறுத்த வன்றலை யவன்பெறப்
பொருத்தி யப்பிழை பொறுத்த னம்பிழை
பொறுத்த லில்லையினி யென்னவே. (அ)

உயர்ந்து போயின முவந்தெ மக்கருள
வொன்றிரு கோடிபல வோராயிர
மிந்திர காலமுள தாற்று வந்தனெ
னிருந்து காணென விரைஞ்சியே. (கூ)

னிரு
ஏற * நின்றிடு திருக்கண் வைத்தருள்செ
யிக்கை யிற்சில துதிக்கைபார்
மாறி யிக்கையி லழைக்க மற்றவை
மதக்க ரித்தலைக ளானபார். (க0)

இக்க ரித்தலையின் வாயி னின்றுதிர
நீர்குடித்து ருமிடித்தெனக்

* "நின்னிரு" என்றதூஉம் பாடம்.

கொாசக ரித்தலகை சுற்ற மற்யிவை
　　குறைத்த லேப்பிண மிதப்பபாா. (கக)

அடகக மன்றிது கிடக்க வெம்முடைய
　　வம்மை வாழ்கவென வெம்மைபாா
சடகக மென்றபயன் வென்றி வென்றிகொள்
　　களப்பெ ரும்பரணி யின்றுபாா. (க௨)

துருசி வீழ்துரக ராசி பாருட
　　றுணிந்து வீழ்குறை துடிபபபா
ரருசி யோடுமத யானை பாருதிர
　　வாறு மோடுவன நாறுபாா. (க௩)

அறற தோளிவை யலேப்ப பாருவை
　　யறுத நின்குடா மிதப்பபா
ரிய தாணரி யிழுப்ப பாரடி
　　யிழுக்கு மூளையில் வழுககலபாா. (க௪)

நிணஙகள் பார்நிண மணங்க ளிநதன
　　நிலஙகள் பார்நில மடஙகலும
பிணஙகள் பாரிவை கிடகக நம்முடை
　　பேய லாதசில பேய்கள்பாா. (க௫)

எனற போதிலிவை மெய்யெ ளவுட
　　னிருந்த பேயபதறி யொன்றனமோ
லொன்று கான்முறிய மேலவி ழுந்தடிசி
　　லுண்ண வெண்ணிவரு மண்ணின்மேல். (க௬)

வேறு.

விழுந்து கொழுங்குரு திப்புன லென்று
　　லெறுங்கை முகந்துமுகக்

தெழுந்து விழுந்தசை யென்று நிலத்தை
யிருந்து துழாவிடுமே. (௧௭)

சுறற நிணத்துகில் பெற்றன மென்று
சுலாவி வெறுங்கையின்
லற்ற குறைத்தலே யென்று விசும்பை
யதுக்கு மெயிற்றினவே. (௧௮)

கயிற்றுறி யொப்பதொர் பேய்வறி தேயுடல
கௌவின தொக்கவிரைந்
தெயிறறை யதுக்கி நிணைத்திடு பேயக
(ளிரைத்து)நிரைத்தனவே. (௧௯)

முறம்பல போல நகங்கண் முறிந்து
முகஞ்சித ருமுதுகுந்
திறம்ப விலாவிறல யோகினி மாதா
சிரித்து முலாவுவரே. (௨0)

அககண மாளு மணங்கினை வந்தனே
செயது கணங்களெலா
மிககண மாளு மினித்தவிர் விசைை
யெனசகை விரித்தலுமே. (௨௧)

வேறு.

கோறறவாகோன் வாளபய னறிய வாழுங
குவலயத்தோர் கலேயனைததுங் கூற வாங்கே
கற்றுவந்தார் கற்றவவன் காணு மாபோற்
கடைபோகக் கண்டருளென் கல்வி யாறே. (௨௨)

வணங்குதலுங் கணங்களெலா மாயப் பாவி
மறித்தெம்மை மறுகூடு சுடுவை யாகி
வணங்கரசி னாணையென வணங்கு மிப்போ
தவைதவிரெங் கிவைகறரு யென்ன வாங்கே. ()

நின்முனிவுஞ் சுரகுருவின் முனிவு மஞ்சி
நிலையரிதென் றிமகிரிபுக கிருந்தேற் கௌவை
தன்முனிவு மவன்முனிவுந் தவிர்க வென்று
சாதனமந் திரவிசசை பலவுந் தந்தே. (௨௪)

உன்னுடைய பழவடியா ரடியா டெய்வ
வுருத்திரையோ கினியென்பா ளனகரு நன்மை
பின்னுள கிடப்பனவிங் கிருகக வென்ன
யானிருந்தேன் சிலகால மிருந்த நாளில. (௨௫)

இந்திரசாலம் முற்றிற்று.

ஆகத் தாழிசை-௧௭௭.

அ. இராச பாரம்பரியம்.

சேண்டுகொண்டெரி காலனொரு * காவிணிமய
சிமயமாலவரை திரித்தருளி மீளவதனைப
பண்டுநின்றபடி நிற்கவிது வென்றுமுதுகிற
பாய்புலிகுறி பொறித்தது மறித்தபொழுதே. ( )

காலமும்மையு முணர்ந்தருளு நாரதனொனுங
கடவுள்வேதமுனி வந்துகடல சூழ்புவியினின
போலுமன்னருள ரல்லரென வாசிபுகலாப [ன.
புகலவதொன்றுளது கேளரச வென்றுபுகலவா

பண்டுபாரத மெனுங்கதை பராசரன்மகனா
பகரவெங்கரி முகன்பரு மருப்பையொருகைக்
கொண்டுமேருசிக ரத்தொரு புறத்திலெழுதிக
குவலயம்பெறு தவப்பய னுரைப்பவரிதால. (ங)

பாரதத்தினுமு வாகிய பவித்ரகதையம
பரமனற்சரிதை மெய்ப்பழைய நான்மறைகளோ
நேரதற்கிதனை நான்மொழிய நீயெழுதி
நெடியகுன்றின்மிசை யோரிசைவ தாமகதையே.

அதன்முதற்பகண்வரு மாதிமுதன மாயனிவனே
யபரமேயனெனு மெய்ப்பெயர தாகவுடனே
பதமுழிப்பதம வருகைகவரு பாதமதுவும
பாதமானசில பார்புகழ வந்தவவையும. (ரு)

அந்தமுடைப விருககுமவ் விருக்கின்வழியே
யாகிவந்தவவ் வருக்கமும் வருக்கமுழுதும

* "நாவிலி" என்றும் பாடம்.

வந்தவட்டகமு மொட்டரிய சங்கிதைகளும்
வாய்மைவேதியர்க டாம்விதி யெனும்வகையுமே.

கமலயோனிமுத லாகவரு முங்கண்மரபிற்
காவன்மன்னவர்க ளாகிவரு கின்றமுறையா
லமலவேதமிது காணுமிதி லாரணிலத்
தமலனேயபய னுகிவரு கென்றருளியே. (எ)

அரணிவேள்வியி * லகப்படு மகண்டவுருவா
யரவணைத்துயிலு மாதிமுத லாகவபயன்
றரணிகாவலள வுஞ்செல மொழிந்துமுனிவன்
றனெழுந்தருள மாமுனி மொழிந்தபடியே. ()

ஆதிமாலமல நாபிகம லத்தயனுதித்
தயன்மரீசியெனு மண்ணலே யளித்தபரிசுங்
காதலகூர்தரு மரீசிமக னுகிவளருங்
காசிபன்கதி ரருக்கனை யளித்தபரிசும். (௯)

அவ்வருககன்மக னுகிமனு மேதினிபுரந்
தரியகாதலனை யாவினது கன்றுநிகரொன்
றெவ்வருககமும் வியப்பமுறை செய்தகதையு
மிகருவாகுவிவன் மைந்தனென வந்தபரிசும். ()

இக்குவாகுவின் மகன்புதல்வ னெனவுரவோ
னிகலுவோனிக லுரஞ்செய்து புரந்தரனெனுஞ்
சகருவாயிர முடைக்களிறு வாகனமெனத்
தானிருந்துபொரு தானவரை வென்றசயமும். ()

* "லகப்படவ" எனவும் பாடம்.

ஒருதுறைப்புனல சினப்புலியு மானுமுடனே
    யுண்ணவைததவுர வோனுலகில் வைத்தவருளும்
பொருதுறைத்தலை புகுந்துமுசு குந்தனிமையோர்
    புரமடங்கலு மரண்செய்து புரந்தபுகழும். (கஉ)

கடலலைக்கவெழு மின்னமுது தன்னையொருவன்
    கடவுள்வானவர்க ளுண்ணவருள் செய்தகதையு
முடலகலக்கற வரிந்துதசை யிட்டுமொருவ
    னொருதுலைபபுறவொ டொக்கநிறை புககபுகழும்.

சூராதிராசன்முத லாகவரு சோழன்முனநாட்
    சோழமண்டல மமைத்தபிற கேழுலகையு
மிராசகேசரி புரந்துபர கேசரிகளா
    மிருவராணைபுலி யாணையென நின்றவிதுவும். ()

காலனுககிது வழக்கென வுரைத்தவவனுங்
    காவிரிப்புனல கொணர்ந்தவவ னும்புவனியின
மேலனைததுலகு மிவ்வகில லோகமுமெலாம் [றனும.
    வென்றுகொண்டவனுமென் றிவாகள்கொண்ட வி

புலியெனககொடியி லிந்திரனை வைததவவனும [னும்
    புணரியொன்றினிடை யொன்றுபுக விட்டவவ
[illegible]குருதி யுண்கென வளித்தவனும்
*[illegible]கராசனை வலிந்துபணி கொண்டவவனும.

தேங்குதூங்கெயி லெறிந்தவவ னுஞசுடர்மணித்
    திரள்விமானமது வான்மிசை யுயர்த்தவவனுங்.
தாங்கள்பாரத முடிப்பளவு நின்றுதருமன்
    றன்கடற்படை தனக்குதவி செய்தவவனும்.(கஎ)

---

* "வாதராசனை" யெனவும் பாடம்.

தளவழிக்குநகை மேல்விழி * பிலத்தின்வழியே
தனிநடந்துரகர் † தங்கள்பதி கொண்டவவனுங்
களவழிக்கவிதை பொய்கையுரை செய்யவுதியன்
கால்வழித்தளையை வெட்டியர சிட்டவவனும்.()

என்றுமற்றவர்க டங்கள்சரி தங்கள்பலவு
மெழுதிமீளவிதன் மேலவழுதி சேரன்மடியத்
தன்றனிககளி றணைந்தருளி வீரமகடன்
றனதடங்கனொடு தன்புய மணைந்தபரிசும். (கக)

வேறு.

தோழுது மன்னரே கனைசெய் பொன்னிபிற
ரொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி கைககணென்
றிங்க ழிக்கவே யங்க ழிந்ததும். (உ0)

தந்து நீர்வரால குருமி வென்றதுந்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநா றுயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும. (உக)

ஒருவர் முன்னொர்நா டந்து பின்செலா
வுதியா மன்னரே மதுரை மன்னரென்
றிருவர் தம்மையுங் கிழிகள் சுற்றுவித்
தெரிவி ளக்குவைத் திகல்வி ளைத்ததும. (உஉ)

---

* "தளவழிக் குகையினிற் பொழி" எனவும்,
† "தங்கண்மணி" எனவும் பாடபேதங்களுள.

வேழ மொன்றுகைத் தாவின் விண்ணின்வாய்
　　விசைய டங்கவு மசைய வென்றது
மீழ முந்தமிழக கூட லுஞ்சிதைத்
　　திகலக டந்தரோ ரிசைப ரந்ததும். (௨௩)

சதய நாள்விழா வுதியர் மண்டலந்
　　தன்னில் வைத்தவன் றனியொர் மாவின்மே
லுதய பானுவொத் துகைகை வென்றகோ
　　னொருகை வாரணம் பலக வாங்கதும. (௨௪)

களிறு கங்கைநீ ருண்ண மண்ணையிற்
　　காய்சினத்தொடே கலவு செம்பியன
குளிறு தெண்டிரைக் குரைக டாரமுங்
　　கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும. ()

கம்பி விசயத் தம்ப நட்டதுங்
　　கடிய ரண்கொளக்கல யானை கட்டறக
கிம்பு ரிப்பணைக் கிரியு கைத்தவன்
　　கிரிக * ளெட்டினும் புலிபொ றித்ததும. (௨௬)

ஒருக ளிற்றின்மேல் வருக ளிற்றையொத்
　　துலகு யக்கொளப் பொருது கொப்பையிற்
பொருக ளத்திலே முடிக வித்தவன்
　　புலிக ளிப்பதோர் குடைக வித்ததும. (௨எ)

வேறு.

பனுவ லுக்கு முதலாய வேத நான்கிற்
　　பண்டுரைத்த நெறிபுதுக்கிப் பழையார் தங்கண

* "ளேழினும்" என்றும் பாடமோதுப.

மனுவினுக்கு மும்முடிதான் மடியாஞ் சோழன்
* மதிக்குடைக்கீ ழறந்தளிர்ப்ப வளர்ந்த வாறும்.

குந்தளரைக் கூடற்சங் கமத்து வென்ற
கோனபயன் குவலயங்காத் தளித்த பின்னை
யிந்நிலக் குலப்பாவை யிவன்பாற் சேர [றி.
வென்னதவஞ் செய்திருந்தா ளென்னத் தோன்

எவ்வளவு திரிபுவன முளவாய்த் தோன்று
மெவ்வளவு குலமறைக ளுளவாய் நிற்கு
மவ்வளவு திகிரிவரை யளவுஞ் செங்கோ
லாணைசெலல வபயன்காத் தளிக்கு மாறும். ()

வேறு.

இப்புறத்திமய மாலவரையின் மார்பினகலத்
தெழுதினனெழுது தற்கரிய வேதமெழுதி
யொபபுறத்தனது தொன்மரபு மம்மரபின்மே
லுரைசெய்பல்புகழுமொன்றுமொழியாதபரிசே.

எழுதிமற்றுரைசெய் தவரவர்கள் செய்பிழையெலா
மெமர்பொறுக்கவென விபபடி முடித்தவிதனைத்
தொழுதுகற்றன மெனத்தொழுது செலலுமளவிற்
சோழவம்சமிது சொன்னவறி வென்னவழகோ.

வேறு.

வையகமாங் குலமடந்தை மன்னபயன்
றன்னுடைய மரபு கேட்டே

---

*“வளங்குடைக்கீ ழறங்களிக்க” எனவும் பாடங் கோடலியலும்.

மையனையான் பெறவெடுத்த வப்பொழுது
மிப்பொழுதொத் திருந்த தில்லை. (௩௩)

உலகையெலாங் காக்கின்ற வொருகவிகைச்
சயதுங்கன் மரபு கீர்த்தி
யலகையெலாங் காக்கின்ற வடமையு
தலங்காப்பா னலமோ வெனவே. (௩௪)

இராசபாரம்பரியம் முற்றிற்று.

ஆகத் தாழிசை-உசக.

௩. பேய்முறைப்பாடு.

ஆறுடைய திருமுடியா னருளுடைய
பெருநதேவி யபயன காககும
பேறுடைய பூதமாப பிறவாமற
பேயகளாப பிறநது கெடடேம. (க)

ஆகாபப ரெஙகளைநீ யறிநதருளிக
காபபதலலா லடையப பாழா
மூாகாககு மதிலவேணடா வுயிா ராதத
வுடமபினைவிட டோடிப போதும. (உ)

ஓயகினறே மோயவுககு மினியாறறே
மொருநாளைக கொருநா ளுஙக
டேயகினற படிதேயநது மிடுககறறேனு
செறறுறலு முயய மாடடேம (௩)

வேறு.

வேகைககு விறகானேம மெலியா நினறே
மெலிநதவுட றிபபதறகு விழுகுங காணேனு
சாகைககித தனையாசை போதும பாழிற
சாககாடு மரிதாகத தநது வைததாய. (௪)

வேறு

சாவததாற பெறுதுமோ சதுமுகனமுன
கீழநாஙகண் மேனாட செயத
பாவததா லெமவாயிறறிற பசியைவைததான
பாவியேம பசிககு மிலலேம. (௫)

வேறு.

பதடிகளாய்க் காற்றடிப்ப நிலைநி லாமற்
பறக்கின்றோம் பசிக்கலைந்து பாதி நாக்கு
முதடுகளிற் பாதியுந்தின் றொறுவா யானோ
முனக்கடிமை யடியேமை யோடப் பாராய். (௬)

வேறு.

அகளங்க னமசகிரங்கா னரசரிடுந்
திறைக்கருள்வா னவன்றன் யானை
நிகளம்பூண் டனவடியே நெடும்பசியா
னறவுலர்ந்து நெற்றறு யற்றேம். (௭)

மூக்கருகே வழுநாறி முடைநாறி
யுதடுகளுந் துடிப்ப வாயை
யீக்கதுவுந் துறியாதுயிந் திருக்கின்றே
மன்றுகி லின்றே சாதும். (௮)

வேறு.

என்றுபல குறைக
ளிரைத்துரைசெய்ய போதத்
தன்றிமய வெற்பினிடை
நின்றுவரு மப்பேய். (௯)

கைதொழு திறைஞ்சியடி
யேன்வடக லிங்கத்
தெய்திய விடத்துள
நிமித்தமிவை கேண்மோ. (௧௦)

வேறு.

மதக்கரி மருப்பிற மதம்புலரு மாலோ
மடப்பிடி மருப்பெழ மதம்பொழியு மாலோ
கதிர்ச்சுடர் விளக்கொளி கறுத்தெரியு மாலோ
காலமுகில் செங்குருதி காலவரு மாலோ. (௧௧)

வாமுர சிருந்துவறி தேயதிரு மாலோ
வந்திரவி லிந்திரவில் வானிலிடு மாலோ
வோர்மனையி லூமனெழ வோரியழு மாலோ
வோமவெரி யீமவெரி போலெரியு மாலோ. (௧௨)

பூவிரியு மாலைகள் புலால்கமழு மாலோ
பொன்செய்மணி மாலையொளி போயொழியு மாலோ
வோவிய மெலாமுடல் வியாபபவரு மாலோ
ஆறுபுனல செங்குருதி நாறவரு மாலோ. (௧௩)

வேறு.

எறுவுழை முடித்ததனை
யென்கொல்விளை வென்றோ
விறுவுழை தனக்கெதிர்
விளம்பின ளணங்கே. (௧௪)

வேறு.

உங்கள் குறியும் வடகலிங்கத்
துள்ள குறியு முமக்கழகே
நங்கள் கணிதப் பேய்கூறு
நனவுங் கனவுஞ் சொல்லுவம. (௧௫)

வேறு.

நிருபரணி வென்றவர்க ளங்கண்முது யானையினங்
ளங்களொடு நிற்பனவுகந்
கொருபரணி யுண்டென வுரைக்கவு முரைப்பரிய
யுமக்கிது கிடைக்குமெனவே. (௧௬)

தடித்தன மெனத்தலை தடித்தன மெனப்பல
தனிப்பன களிப்பமெனவே
நடித்தன நடிப்பவுமி யுற்றன கொடிப்பறையு
நனைத்தன வுதட்டினுடனே. (௧௭)

விலக்குக விளைத்தன விளைத்தன வெனக்களி
விளைத்தன விளைத்தனவிலா
வலக்குக வடிக்கறி சிரித்தன வயாத்தன
பசித்தபசி யுற்றபசியோ. (௧௮)

வேறு.

ஆடியினைத் தொழுதணங்கை
யணங்கேயிக் கலிங்கக்கூழ்
கூடியினைத் துண்டொழியுங்
கூடாரப் போதுமோ. (௧௯)

போதும்போ தாதெனவே
புடைப்படல மிடவேண்டா
வோதனுக்கு மிலங்கைப்போர்
கொட்டிரட்டி கலிங்கப்போர். (௨௦)

பேய்முறைப்பாடு முற்றிற்று.

ஆகத்தாழிசை-௨௬௧.

௰. அவதாரம்.

அன்றிலங்கை பொருதழித்த வவனேயப்
பாரதப்போர் முடித்துப் பின்னை
வென்றிலங்கு கதிராழி விசயதர
னெனவுதித்தான் விளம்பக் கேண்மின். (௧)

தேவரெலாங் குறையிரப்பத் தேவகிதன்
றிருவயிற்றில் வசுதேவற்கு
மூவுலகுந் தொழநெடுமால் முன்னொருநா
ளவதாரஞ் செய்த பின்னை. (௨)

வேறு.

இருண்முழுது மகற்றும்விது குலத்தோன் றேவி
யிகலவிளங்கு தபனகுலத் திராச ராச
னருடிருவின் றிருவயிற்றில வந்து தோன்றி
யாலிலையி னவதரித்தா னவனே மீள. (௩)

வேறு.

வந்தருளி யவதாரஞ் செய்தலுமே
மண்ணுலகு மறைக ளொன்கு
மந்தரநீங் கினவென்ன வந்தரதுந்
துமிமுழங்கி யெழுந்த தாங்கே. (௪)

அலர்மழைபோன் மழைபொழிய வதுகண்டு
கங்கைகொண்ட சோழன் றேவி
குலமகடன் குலமகனைக் கோகனத
மலர்க்கையா லெடுத்துக் கொண்டே. (௫)

அவனிகாக்கும் புத்திரனை யடையாள
மவயவத்தி * னடையவே நோக்கி
யிவனெமக்கு மகனாகி யிரவிகுலம்
பாரிக்கத் தக்கவ னென்றே. ([illegible])

வேறு.

திங்களி னிளங்குழவி செம்பவள மென்றுஞ்
செய்யபரி திக்குழவி பையமணி யென்றுந்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமுந்
தனித்தனி யுவப்பதொர் தவப்பய னுதித்தே.

சினப்புலி வளர்ப்பதொர் சிறுப்புலியு மொத்தே
திசைக்களி றணைப்பதொர் தனிக்களிறு மொத்தே
யனைத்தறமு மொக்கவழி வைக்கவழி வைத்தே
யறத்தொடு † மறத்துறை நடக்கநடை கற்றே. ()

பண்டுவரு மேதினியா ருறுதியி லாதன
படைக்கலமு மாயினவெ னைத்துதெரி வெய்யது
தண்டுதனு வாள்பணில நேமியெனு நாமத்
தன்படைக ளானவிரு மையும்படை தரித்தே. (௯)

தாயர்தரு பான்முலை சுரக்கவரு நாளே
தானுமுல கத்தவர் தமக்கருள் சுரந்தே
தூயமனு வுஞ்சுருதி யும்பொருள் விளங்கச்
சொற்கடெரி யத்தனது சொற்கடெரி வித்தே. ()

வேறு.

திருமார்பின் மலர்மடந்தை திருக்கழுத்தின்
மங்கலநா ணென்ன முந்நூற்

---

* "னடைய" எனவும் பிரதிபேதம்.

† மனுத்துறை" என்றும் வேறு பாடமுண்டு.

பெருமார்பின் வந்தொளிரப் பிறப்பிரண்டா
வதுபிறந்து சிறந்த பின்னர். (௧௧)

போகங்கொண் மாணுருவாய்ப் புவியிரங்க
வஞ்ஞான்று புகன்று கொண்ட
வேதங்க ளனைத்தினையும் வேதியர்பாற்
கேட்டருளி மீண்டு தன்றே. (௧௨)

நிறைவாழ்வைப் பெறமனமகத்து மணித்தென்று
நிலப்பாவை களிப்ப வந்தத்
துறைவாளைப் புயத்திருத்தி யுடைவாளாத்
திருவரையி னணிய வைத்தே. (௧௩)

வேறு.

ஈரிரு மருப்புடைய வாரண முகைத்தே
யிந்திர னெதிர்ந்தவனை வென்றுவரு மேயா
மோரிரு மருப்புடைய வாரண முகைத்தே
யொன்னலனை வெல்லுமென வன்னது பயின்றே.

இறைவனை யுஞ்செல வருக்கொருநாள்போ
லேழ்பரி யுகைத்திரு ளகற்றிவரு மேயா
னொருமறைவய மானடவி யித்தனை வளாகத்
துற்றவிரு டீர்ப்புனென மற்றது பயின்றே. (௧௫)

சககிர முதற்படையொ ராங்குமுத லுளே
தன்னுடைய வானவத லல்லவை நமக்குத
திக்குவிசய த்தின்வரு மென்றவை பயிற்றிச்
செங்கைமலர் கொண்டில சுமந்தில தனக்கே. (௧௬)

வேறு.

உரைசெய்பல கல்விகளி னுரிமைபல சொலலுவதெ
னுவமையுரை செய்யினுலகத்
தரசருள ரல்லரென வவைபுகழ மல்குகலை
யவையவைகள் வலலபிறகே. (கஎ)

இசையுட னெடுத்தகொடி யபயனவ னிக்கிலனை
யிளவரசில வைத்தபிறகே
திசையரச ருக்குரிய திருவினை முகப்பதொரு
திருவுள மடுத்தருளியே. (கஅ)

வளர்வதொர் பதத்திளிடை மதகரி முகத்திணிமை
வளையுகிர் மடுத்துவிளையா
டிளவரி யெனப்பகைஞ ரெதிர்முனை களைக்கிழிய
வெறிபடை பிடித்தருளியே. (க௯)

குடதிசை புகக்கடவு குரகத வீதத்திரவி
குறுகலு மெறிக்குமிருள்போல
வடதிசை முகத்தரசர் வருகத முகத்தனது
குரகத முகைத்தருளியே. (உ0)

புரமெரி மடுத்தபொழு ததுவிது வெனத்திகிரி
புகையெரி குவிப்பவயிராக
கரமெரி மடுத்தரசர் கரமெதிர் குவிப்பதொரு
கடவரை தனைக்கடவியே. (உக)

குளமுதிர மெத்தியதொர் குரைகடல கடுப்பவெதிர்
குறுகலர்கள் விட்டகுதிரைத

தன்முதிர வெட்டியொரு செருமுதிரவொட்டினர்க
ட்லைமலை குவித்தருளியே. (உஉ)

வேறு.

மனுக்கோட்ட மழித்தபிரான்
வளவர்பிரான் றிருப்புருவத்
தனுக்கோட்ட நமன்கோட்டம்
பட்டதுசக் கிரக்கோட்டம். (உ௩)

வேறு.

சரிகளெங்கொறும் தங்கள் சயமக
* டன்னை மன்னப யன்கைப் பிடித்தலும
பரிகளுங்களி றுந்தன ராசியும்
பாரி போகங் கொடுத்தனர் பார்த்திபர். (உ௪)

பொருத ராதிபர் கண்கள் சிவந்தில
போரி லோடிய கால்கள் சிவந்தன
விருத ராச பயங்கரன் செங்கையில
வேல்சி வந்தது கீர்த்தி வெளுத்ததே. (உ௫)

வேறு.

மூவுலகைத் தொருதனி யபய னிப்படி
வடதிசை மேற்செல மன்னர் மன்னவன்
தேவருக் கரசனும் விசும்பின் மேற்செல
தென்றிசைக் குப்புகுந் தன்மை செப்புவாம். ()

வேறு.

மறையவர் வேள்வி குன்றி
மனுநெறி யனைத்து மாறித்

* "டம்மை" யெனவுஞ்சில பிரதிகளிற் காணலாம்.

துறைகளோ ராறு மாறிச
சுருதியு முழுக்க மோயந்தே. (௨௭)

சாதிக ளொன்றோ டொன்று
தலைதடு மாறி யாரு
மோதிய நெறியி னில்லா
தொழுக்கமு மறந்து போயே. (௨௮)

ஒருவரை யொருவர் கைம்மிக்
கும்பாதங் கோயில சோம்பி
யரிவையர் கற்புச் சோம்பி
யரண்களு மழிய வாங்கே. (௨௯)

கலியிருள் பரக்கக் காலைக்
கலியிருள் கரக்கத் தோன்றி
மொழிகட லொருக்க வென்ன
வுலகுய்ய வந்து தோன்றி. (௩௦)

காப்பெலா முடைய தானே
படைப்பது மிகட னாகக் கொண்டு
கோப்பெலாங் குலைந்தோர் தம்மைக்
குறியிலே நிறுத்தி வைத்தே. (௩௧)

விரிபுனல் வேலை நான்கும்
வேதங்க ணான்கு மார்ப்பத்
திரிபுவ னங்கள் வாழ்த்தத்
திருவபி டேகஞ் செய்தே. (௩௨)

வேறு.

அறைகழ லரச ரப்பொழு
தடியிசை யறு கெடுத்திட

மறையவர் முடி யெடுத்தனர்
மனுநெறிதலை யெடுக்கவே. (௬௩)

நிரைமணிபல குயிற்றிய
நெடுமுடிமிசை விதிப்படி
சொரிபுனலிடை முளைத்தன
துறைகளினற மனைத்துமே. (௬௪)

பொதுவறவுலகு கைக்கொடு
"புலிவளர்கொடி யெடுத்தலு
மதுமுதலகொடி யெடுத்தன
வமரர்கண்முழு வெடுக்கவே. (௬௫)

குவிகைகொடரசர் சுற்றிய
குரைகழலபயன் முத்தணி
கவிகையினில வெறித்தது
கலியெனுமிரு ளொளித்ததே. (௬௬)

வேறு.

அரசுறையும் * படிமலைக
ளடையவிளங் கினவவனையோ
ரொருதனிவெண் குடையுலகி
லொளிகொணலந் தருநிழலில. (௬௭)

அரிதுயிலும் படிகடல்க
ளடையவிளங் கினகவினி
ரொருகருவெங் கலிசகுலி
யுலவுபெரும் புகழ்நிலவில். (௬௮)

---

* "அரசுறையும்" என்றும் பாடங் கொள்ப.

கிழிலிலடைந் தனதிசைக
ளொழியிலடைந் தனமறைகள்
கழிவிலடைந் தனருதியர்
கடலிலடைந் தனர்செழியர்.

கருணையொடுந் தனதுபய
கரமுதவும் பொருண்மழையி
னரணியமந் திரவனல்க
ளவையுதவும் பெருமழையே.

பரிசிலசுமந் தனகவிகள்
பகடுசுமந் தனதிறைக
ளரசுசுமந் தனவிறைக
ளவனிசுமந் தனபுயமும. (௬௧)

வேறு.

விரித்தவாளுகிரா விழித்தழற்புலியை
மீதுவைக்கவிம யத்தினைத்
திரித்தகோலிலவனே யுண்டுநீதிபுனை
செய்யகோலிலவனை யில்லையே. (௬௨)

கதங்களிறபொரு திறைஞ்சிடாவரசா
காலகளிற்றலையு நாலகளின்
பதங்களிற்றலையு மன்றிவேறொரு
பதங்களிற்றலைக ளில்லையே. (௬௩)

மென்கலாபமட வார்கள்சீறடி
மிசைசசிலம்போலி விளைப்பதோ
ரின்கலாம்விளைவ தன்றியெங்குமொ
ரிகற்கலாம்விளைவ தில்லையே. (௬௪)

வேறு.

வருசெருவொன் றின்மையினன் மற்போருஞ்சொற்
புலவோர் *வாதிற் போரு
மிருசிறைவா ரணப்போரு மிகன்மதவா
ரணப்போரு மினைய கண்டே. (௪௫)

கலையினொடுங் கலைவாணர் கவியினொடு
மிசையினொடுங் காதன் மாதர்
முலையினொடு மனுநீதி முறையினொடு
மறையினொடும் பொழுது போக்கி. (௪௬)

காலாற்றண் டலையுழக்குங் காவிரியின்
கரைமருங்கு வேட்டை யாடிப்
பாலாற்றங் கரைமருங்கு பரிவேட்டை
யாடுதற்குப் பயண மென்றே. (௪௭)

முரசறைகென் றருளுதலு முழுதுலகு
மொருநகருட் புகுந்த தொப்பத்
திரைசெய்கட லொலியடங்கத் † திசைநான்கிற
படைநான்குந் திரண்ட வாங்கே. (௪௮)

அழகின்மே லழகுபெற வணியணைத்து
மணிந்தருளிக் கணித நூலிற்
பழகினர் தெரிந்துரைத்த பழுதறுநாட
பழுதற்ற பொழுதத் தாங்கே. (௪௯)

---

* "வாதப்" எனவும் பாடம்.

† "திரை" யெனவும் பாடம்.

வேறு.

அனகதானநூ மங்கண்மறை மன்னர்பெறவே
யபயதானமப யர்புகுது மன்னர்பெறவே
கனகதானமுறை நின்றுகவி வாணர்பெறவே
கரடதானமத வாரணமு மன்றுபெறவே. (௫௦)

மற்றவெங்கட களிற்றினுத யக்கிரியின்மேன்
மதிகவித்திட வுதித்திடு மருக்கனெனவே
கொற்றவெண்குடை கவிப்பமிசை கொண்டுகவரிக
குலமதிப்புடை கவித்தநில வொத்துவரவே. ( )

ஒருவலம்புரி தழங்கொலி முழங்கியெழவே
யுடன்முழங்குபணி லம்பல முழங்கியெழவே
பருவம்வந்துபல கொண்டலெகண் முழங்கியெழவே
பலவிதங்களொடு பலவிய முழங்கியெழவே. ( )

மன்னர்சீசய மிகுந்திடை விடாதவொலியு
மறைவலாளர்மறை நான்வயின் வழாதவொலியு
மின்னமாகடன் முழங்கியெழு கின்றவொலியென்
றிம்பரும்பரறி யாதபரி செங்குமிகவே. (௫௩)

வாழிசோழகுல சேகரன் வகுத்தவிசையின்
மதுரவாரியென லாகுமிசை [illegible]தரிதெரு
வேழுபாருலகி னேழிசைகள் சூழவருவா
யானைர்துபிரி யாதுட னிருந்துவரவே. (௫௪)

பொன்னின்மாலைமலர் மாலைபணி மாறியுடனே
புவனிகாவலர்க டேவியர்கள் * சூழ்பிடிவரச்

* "சூழ்புடை" என்பதூஉம் பாடம்.

சென்னியானையுட னானையை நடத்துமுரிமைத்
தியாகவல்லிநிறை செல்வியுடன் மஞ்கிவரவே. ()

பிடியின்மேலவரு பிடிக்குல மநேகமெனவே
பெய்வளைக்கைமட மாதர்பிடி மீதின்வரவே
முடியின்மேன்முடி நிரைத்துவருகின்றதெனவே[வே.
முறைசெய்மன்னவர்கள்பொற்குடைவிரித்துவர

யானைமீதுவரும் யானையு மநேகமெனவே
யடுகளிற்றின்மிசை கொண்டர சநேகம்வரவே
சேனைமீதுமொரு சேனைவரு கின்றதெனவே
தெளிபடைக்கல னிலாவொளி படைத்துவரவே.

முகிலின்மேன்முகின் முழங்கிவரு கின்றதெனவே
மூரியானைகளின் மேன்முரச திர்ந்துவரவே
துகிலின்மேலவரு துகிற்குலமு மொக்குமெனவே
தோகைநீள்கொடிகண்மேன்முகிநெருடங்கிவரவே.

தேரின்மீதுவரு தேர்களு மநேகமெனவே
செம்பொன்மேகலை நிதம்பநிரை தேரின்வரவே
பாரின்மீதுமொரு பாருளது போலுமெனவே
படல தூளியு மெழுந்திடையின் மூடிவரவே. ()

வேறு.

யானை மேலிளம் பிடியின் மேனிரைத்
திடைய ருதுபோ மெறிக டற்கிணை
சேனை மாகடற் கபய னிம்முறைச்
சேது பந்தனஞ் செய்த தொக்கவே. (௯0)

நீல மாமணிச் சிவிகை வெள்ளமு
 நித்தி லக்குலக் கவிகை வெள்ளமுங்
காலி னுள்வரும் யமுனை வெள்ளமுங்
 கங்கை வெள்ளமுங் காண்மி னென்னவே. (௬௧)

கெண்டை மாசுண முவண மாரணங்
 கேழ லாளிமா மேழி நோழிநிற
கொண்ட வாயிரங் கொடிநு டங்கவே
 குமுறு வெம்புலிக் கொடியு லாவவே. (௬௨)

தோடைகள் கங்கரம் புடைகொள் கொங்கைகண்
 சோதி வாண்முகந் தோகை யோதிமென்
னடைகண் மென்சொலென் றடைய வொப்பிலா
 நகைம ணிக்கொடித் தொகைப ரக்கவே. (௬௩)

வேறு.

எங்குமுள மென்கதலி யெங்குமுள தண்கமுகு
 மெங்குமுள பொங்குமிள நீ
ரெங்குமுள வண்பலவ மெங்குமுள செங்குமுத
 மெங்குமுள செங்கயல்க ளே. (௬௪)

ஆலை தாங்காமுள வல்லிநடை தாமுமுள
 வாலைகமழ பாகுமுளவாய்
வேறுமொரு பொன்னிவள நாடெனு துங்கன்முன
 விதித்ததுவு மொக்குமெனவே. (௬௫)

வேழநிரை வென்றுமலை யெங்குமிடை கின்றவயில்
 வென்றியப யன்றனருளால
வாழவப யம்புகுது சேரனொடு கூடமலை
 நாடடைய வந்ததெனவே. (௬௬)

அக்கிரி குலங்கள்விடு மங்குலியி னுண்டிவலை
யச்செழிய ரஞ்சிவிடுமத
திக்கிலுள திக்தில முகந்துகொடு வீசியொரு
வென்றல்வரு கின்றதெனவே. (௬௭)

தென்றிசையி னின்றுவட திககின்முகம் வைத்தருளி
முககணுடைச் வெள்ளிமலையோன்
மன்றினட மாடியருள் கொண்டுவிடை கொண்டதிசை
மாநகருள விட்டருளியே. (௬௮)

விட்டவதி கைபதியி னின்றுபய ணம்பயணம்
விட்டவிளை யாடியபயன்
வட்டமதி யொத்தகுடை மன்னர்தொழ நண்ணினன்
வளங்கெழுவு கசசிநகரே. (௬௯)

என்னுமித னன்மொழி யெடுததிறைவி சொலலுவதன்
முனனமிகல கண்டதொருபேய்
தன்னுடைய காறனது பிற்பட மனததுவகை
தள்ளிவர வோடி வரவே. (௭0)

வேறு.

கலிங்கர் குருதி குருதி
கலிங்க மடைய வடைய
மெலிந்த வுடலக டடிமின்
மெலிந்த வுடலக டடிமின். (௭௧)

உணங்கல் வயிறு குளிர
வுவந்து பருக பருக
கணங்க ளெழுக வெழுக
கணங்க ளெழுக வெழுக. (௭௨)

வேறு.

என்செயப் பாவி காலனிங்
கிருப்பதென்ற * கிருப்ப முன்னமே
வன்சிறைக் கழுகும் பாறும் பருந்தும்.
வயிறுகள் பீறிப் போனவே. (எ௩)

வயிறுக ளென்னிற் போதா
வாய்களோ போதா பண்டை
யெயிறுக ளென்னிற் போதா
வென்னினு நீண்டப் போதுமே. (எ௪)

சிரமலை விழுங்கச் செந்நீர்த்
திரைகடல் பருக வாகப்
பிரமனை வேண்டிப் பின்னும்
பெரும்பசி பெறவும் வேண்டுமே. (எ௫)

வேறு.

என்றவோசை தன்செவிக்
கிசைத்தலுந் தசைப்பிணந்
தின்றபோற் பருத்துமெய்
சிரித்துமேல் விழுந்துமே. (எ௬)

ஓகைசொன்ன பேயின்வாயை
யோடிமுத்த முண்ணுமே
சாகைசொன்ன பேய்களைத் தாடலை
தகர்க்கபற்க ளென்னுமே. (எஎ)

பிள்ளைவீழ வீழவும்
பெருந்துணங்கை கொட்டுமே

* "கிருக்கு" எனவும் பாடமுண்டு.

வள்ளைபாடி யாடியோடி
வாவெனு வழைக்குமே. (எஅ)

எனுவுரைத்த தேவிவாழி
வாழியென்று வாழ்த்தியே
கனுவுரைத்த பேயினைக்
கழுத்தினிற்கொ டாடுமே. (எகூ)

நந்தல் = மயக்கம்.

ஆடிவரு பேய்களி னலந்தலை தவிர்த்தடு
பறந்தலை யறிந்ததனி நின்னின் *
றோடிவரு பேயயிக லுள்ளபடி சொலகென
வுரைத்தன ளுரைத்தருளவே. (அ0)

அவதாரம் முற்றிற்று.

ஆகத் தாழிசை - கூகத.

* "தனிநின்" என்பதும் பாடம்.

௰க. காளிக்குக் கூளிகூறியது.

மாவா யிரமும் படக்கலிங்கர்
மடியக் களப்போ ருடைத்தோர்க்கு
நாவா யிரமுங் கேட்போர்க்கு
நாளா யிரமும் வேண்டுமால. (௧)

ஒருவர்க் கொருவாய் கொண்டுரைக்க
வொண்ணா தேனு முண்டாகுஞ்
செருவைச் சிறியேன் விண்ணப்பஞ்
செய்யச் சிறிது கேட்டருளே. (௨)

வேறு.

பாரெ லாமுடை யானப யன்கொடைப்
பங்க யக்கர மொப்பெனப் பண்டொருநாள்
காரெ லாமெழுந் தேறவா நாழிகைக்
காருச மழைபொழி மாநதி யகன்றதே. (௩)

அம்பொன் மேரு வதுகொ லிதுகொலென்
றாயி ரங்கதிர் வெய்யவ னையுறுஞ்
செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினிற்
செய்த சித்திர மண்டபந் தன்னிலே. (௪)

மொய்த்தி லங்கிய தாரகை வானின்
முகட்டெ ழுந்த முழுமதிப் பத்தியி
னெய்த்தி லங்கிய நித்திலப் பந்தரி
னின்று வெண்குடை யொன்று நிழற்றவே. (௫)

மேற்க வித்த மதிக்குடை யின்புடை
வீசு கின்றவெண் சாமரை தென்றிசைப்
பாற்க டற்றிரை யோரிரண் டிங்கிரு
பாலும் வந்து பணிசெய்வ போலுமே. (௬)

அங்கண் ஞால மனைத்தும் புயத்திலே வைத்
தாட கக்கிரி யிற்புலி வைத்தவன்
சிங்க வாசனத் தேறி யிருப்பதோர்
சிங்க வேறெனச் செவ்வி சிறக்கவே. (௭)

பணிப்ப ணத்துறை பார்க்கொரு நாயகன்
பலக லைத்துறை நாவி லிருந்தவன்
மணிப்ப ணிப்புயத் தேசிங்க வாகினி
வந்து செந்திரு மாதொ டிருக்கவே. (௮

தரும டங்க முகந்து தனம்பொழி
தம்பு யம்பிரி யாச்சயப் பாவையுந்
திரும டந்தையும் போற்பெரும் புண்ணியஞ்
செய்த தேவியர் சேவித் திருக்கவே. (௯

நாட காதி நிருத்த மனைத்தினு
நாடகப்பெரும் புண்ணிய மெண்ணிய
வாடல பாடல ரம்பைய ரொக்குமவ்
வணங்கு மாரு மநேக ரிருக்கவே. (௧௦

சூதா மாகத ராதிய மாந்தருந்
துய்ய மங்கலப் பாடகா தாமுநின்
பாத மாதர ரியவர் கட்கெலாம்
பைம்பொன் மௌலி யெனப்புகழ் பாடவே. (௧௧

வீணை யாழ்குழல் பண்ணுமை வல்லவர்
வேறு வேறிவை நூறு விதம்படக்
காண லாமவை கண்டன நீயினிக்
காண்டல் வேண்டுமெனக்கழல் போற்றவே. (கஉ)

தாள முஞ்செல வும்பிழை யாவகை
நால்வ குத்தன நன்னெறி பாடவே
காள முங்களி யும்பெறும் பாணர்கள்
நாவி யிற்பிழை கண்டனர் கேட்கவே. (கங)

அவதா 54

வெங்க ளிற்றி னிழிந்தபின் வந்துழி
வீழ்ந்த மன்னவர் வெந்நிடு முன்னரும்
தங்கள் பொற்குடை சாமரை என்றிவை
தாங்க டாங்கொடு தாம்பணி மாறவே. (கச)

தென்ன வர்க்கதி ராதிப ராயவர்
சேவி யாதவர் செவ்வியு மா[illegible]ரே
மன்ன ராதிபன் வானவ ராதிபன்*
வந்தி ருந்தனன் என்று விருந்தரே. (கரு)

மண்ட லீகரு மாநில வேந்தரும்
பாடம் - வந்து ணங்கு கடைத்தலை வண்டைமன் = [illegible]
றொண்டை மான்முதன் மந்திர பாரகர்
சூழ்ந்து தன்கழல் சூடி யிருக்கவே. (கசு)

முறையி டத்திரு மந்திர வோலையாண்
முன்வ ணங்கி முழுவதும் வேந்தர்த[illegible]

---

* "வானவர் சம்பிறை" எனவும் பாடம்.

திறைமயி டப்புற நின்றன ரென்றலுஞ்
செயகை நோக்கிவந் தெய்தி நெருக்கவே. (௧௭)

வேறு.

தென்னவர் வில்லவர் கூபகர் சாபகர்
சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர் கைதவர் காடவர்
காரிபர் கோசலரே. (௧௮)

கங்கர் கடாரர் கவிந்தர் துமிந்தர்
கடம்பர் துளும்பர்களே
வங்க ரிலாடர் மராடர் விராடர்
மயிந்தர் சயிந்தர்களே. (௧௯)

சிங்களர் வங்களர் சேகுணர் சேவணர்
செயவன ரையணரே
கொங்கணர் கொங்கர் குலிங்கர் சவுந்தியர்
குச்சரர் கச்சியரே. (௨௦)

மத்தவர் மத்திரர் மாளுவர் மாகதர்
மச்சர் மிலேச்சர்களே
குத்தர் குணத்தர் வடக்கர் துருக்கர்
குருக்கர் வியத்தர்களே. (௨௧)

எங்க ளரசரு நாடு மெமக்கருள்
செய்கவென வெம்மையிடச்
சொன்ன தனங்கள் கொணர்ந்தன மென்றடி
சூடி கரங்களொடே. (௨௨)

வேறு.

ஆர மிவையிவை பொற்கல
மானை யிவையிவை யொட்டக
மாட லயமிவை மற்றவை
யாது முறையொடு பெட்டக
பார முடையன நித்தில
மேரு நவமணி கட்டிய
வேக வட மிவை மற்றவை
யாதும விலையில பக்கமே (உஎ)

இவையு மிவையு மணித்திர
ளிவைய விவைகனக் குவை
யிருளுமிழ வெயிலு மெறித்திட
விளங்கு மணிமக ரக்குழை
யுவையு மவையு மிலக்கண
முடைய பிடியிவை பாடக
மியாசெய கொடியிவை மற்றிவை
யுரிமை யரிவையர் பட்டமே. (உஅ)

ஏழ் பருவ மடக்குமிடு
நாலு கனியு மிவற்றெதி
ரானை யரசரொ டொத்தரோ
[illegible] ரானி யிருவ ரெனிற்புவி
மாழ் பருவ மவர்க்கிட
யாமு மிசைவ மெனப்பல
மான் வரசர் தனித்தனி
வாழ்வு கருதி யிருப்பரே. (உ௯)

வேறு.

அரச ரஞ்சவெலன வடியி ரண்டுமவா
முடியின் வைத்தருளி யரசர்மற
றுணைசெ யுந்திசைக ளொழிய நின்றவரு
முளர்கொ லென்றருளு பொழுதிலே. (உசு)

கந்திறைகொ டடைய வந்தரசர்
கழல்வ ணங்கினர்க ளிவருடன்
வா சிங்காபதி யவனி ரண்டுவிசை
வருகி லன்றிறைகொ டெனலுமே. (உஎ)

உ கன்கொலென நிலகு லந்தரச
பிரா டுங்கவொளிர பவளவாய்
முறுவல் கொண்டபொரு ளறிகி லஞ்சிறிது
புனிவு கொண்டநில வதனமே. (உஅ)

ளியி னின்றிடு றும வலிய குன்றரண
மிடிய நம்படைஞர் கடிது செல்
றளிய மமபுமத மலைகள கொண்டணைமி
னவனை யுங்கொணாமி னெனலுமே. (உகூ)

இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
யெறிவ னென்றுகழ றெழுதனர்
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே. (௩0)

வேறு.

அடைய வதைசைப பகைதுகைபபனென்*
றசைகொண்டடற் றெண்டமான்

* "துமிப்பனென்" எனவும் பாடம்.

விடையெனக் கனைப்ப புரவியாக் கலன்
